உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 4 வெள்ளிக்கிழமை (18-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:173



யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.கே.குகேந்திரன், சி.தவராஜா, எஸ்.சிவதாசன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதன் மற்றும் யாழ்.செயலக திட்டமிடல் அதிகாரிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கிளிநொச்சி அரசஅதிபர் ஏ.ஐயாத்துரை உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: றோய் மதிவதனன்)*

# தடை நீக்கப்பட்டால்தான் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு!

## நோர்வேத் தூதுக்குழுவிடம் நேற்று புலிகள் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

வவுனியா,மே18

**"அரசியல் பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை ஸ்ரீலங்கா அரசு நீக்கிவிடுவது அவசியம். தடை நீக்கப்பட்டால்தான் சட்டபூர்வமான அமைப்பாக - எம்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற சமத்துவத்துடன் - பேச்சுக்களில் நாம் பங்குபற்ற முடியும்"**

**- விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்.**

நேற்று மல்லாவிக்கு விஜயம் செய்த நோர்வே அரசின் சமாதானக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் மல்லாவியில் உள்ள அரசியல் செயலகத்தில் நீண்ட நேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

அனுராதபுரத்தில் இருந்து நேற்றுக்காலை புறப்பட்ட எரிக் சொல்ஹெய்ம் காலை 9.45 மணியளவில் வவுனியாவுக்கு வந்து சேர்ந்தார்.

அங்கிருந்து படையினரின் பாதுகாப்புடன் பிரமணாளங்குளம் சோதனை நிலையத்தை அடைந்த எரிக் சொலஹெய்ம் குழுவினரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் அங்கிருந்து அழைத்துச் சென்றனர்.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளில் புலிகளின் அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன், புலித்தேவன் ஆகியோர் சொல்ஹெய்ம் அணியினரை வரவேற்றனர்.

நண்பகல் ஒரு மணியளவில் குழுவினர் மல்லாவியைச் சென்றடைந்ததும் பிற்பகல் 3 மணிக்குப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

இரவு 8 மணி வரை சுமார் 5 மணி நேரம் பேச்சுக்கள் தொடர்ந்தன.

விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி, காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் புலித்தேவன், ஜோர்ச் ஆகியோரும் -

நோர்வே அரசின் சமாதானக் குழுவின் சார்பில் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்போர்க், நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த செல்வி கேஸ்டி ஆகியோரும் -

நேற்றைய பேச்சுக்களில் பங்குபற்றினர்.

நேற்றைய பேச்சுக்கள் குறித்து விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் தடை நீக்கம் பற்றிய விவகாரமே இந்தப் பேச்சுக்களில் முக்கிய அம்சமாக அமைந்தது.

தடை நீக்கம் செய்வது பேச்சுக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை 5 எம்.பிக்கள் பகிஷ்கரித்தனர்

யாழ்ப்பாணம்,மே18

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு -கிழக்கு தமிழ் விவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தினை யாழ்மாவட்டத்திலுள்ள 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, சி.சிவமகாராசா ஆகியோரே கூட்டத்தினைப் பகிஷ்கரித்தனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தினை யாழ்.செயலகத்தில் நடத்துமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் செயலாளரான யாழ். அரசாங்க அதிபரிடம் 5 எம்.பிக்களும் கூட்டாகக் கோரியிருந்தனர்.

தமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமையினாலும் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

## குறைநிவிர்த்தி சேவையின்போது கடவுச்சீட்டு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே18

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ள மக்கள் குறைநிவிர்த்தி சேவையின் போது கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடாநாட்டில் பெரும் எண்ணிக்கையான மக்கள், கடவுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொள்வது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு தெரிவித்தது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## *சிறந்த பத்திரிகையாளன் விருது நிமலராஜனுக்கு!*

கொழும்பு,மே18

கடந்த வருடத்தின் சிறந்த பிராந்திய பத்திரிகையாளருக்கான பேராசிரியர் கே.கைலாசபதி விருதை மறைந்த யாழ்ப்பாணச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டுக்கான சிறந்த பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் விழா இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை மவுண்லேவேனியா ஹோட்டலில் நடைபெற்றது.

மறைந்த செய்தியாளர் நிமலராஜனுக்கு வழங்கப்பட்ட விருதினை அவரது சகோதரி பெற்றுக் கொண்டார்.

நிமலராஜன் பி.பி.ஸிக்கு சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் அளித்த பேட்டிகள் விருது வழங்குவதற்கு முன்னர் ஒலிபரப்பப்பட்டன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணீர்ப்புகைக் குண்டு வீசி

## பல்கலை மாணவர் ஊர்வலம் கலைப்பு

### *கொழும்பில் நேற்றுச் சம்பவம்*

கொழும்பு,மே18

பல்கலைக்கழகங்களைத் தனியார் மயமாக்குவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கண்டித்து -

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் காலை 10 மணியளவில் களனிப் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பித்த ஊர்வலத்தை கண்ணீர்ப் புகைக்குண்டுகளை ஏவியும் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டும் பொலீஸார் கலைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் பத்து மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

களனிப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த ஊர்வலம் கண்டி வீதி ஊடாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகம் நோக்கிச் செல்ல முனைந்ததாகவும் -

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக மாணவர்களை கலைந்து செல்லுமாறு தாங்கள் கோரியதாகவும் -

அந்தக் கோரிக்கையை ஏற்காமல் அவர்கள் ஊர்வலத்தை தொடர்ந்ததை அடுத்தே அதைக் கலைத்ததாகவும் -

பிரதி பொலீஸ்மா அதிபர் தயா ஜயசுந்தர தெரிவித்தார். (உ-3-10)

## புலிகள் விடயத்தில் கடும் போக்கு ஜெயலலிதா நேற்று அறிவிப்பு

சென்னை,மே18

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாகத் தான் கடுமையான போக்கைக் கடைப்பிடிப்பதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கைத் தமிழ் மக்கள் மீது தான் அனுதாபப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் -

ஆனால் புலிகள் மீதான தனது கடும் போக்கில் மாற்றமில்லை என்றும் - ஜெயலலிதா அப்போது தெரிவித்தார்.

புலிகள் மீது இந்திய அரசு விதித்துள்ள தடையை நீக்குவதற்கு தனது அரசு ஒரு போதும் ஆதரவளிக்காது என்றும் ஜெயலலிதா வலியுறுத்திக் கூறினார்.

கடந்த காலத்தில் புலிகள் தமிழகத்துக்குள் சுதந்திரமாக ஊடுருவிய போதும் அப்போதைய முதல்வர் கருணாநிதி அதனைத் தடுக்க எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் ஜெயலலிதா குற்றஞ்சாட்டினார். (உ-ஒ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## அபிவிருத்திக் கூட்டத்துக்கு வராதது ஏன்?

# எம்.பிக்களுக்கு தாழ்வு மனப்பான்மை என்கின்றார் அமைச்சர் டக்ளஸ்

தாழ்வு மனப்பான்மையினாலும், சில அரசியல் காரணங்களுக்காகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனது அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று தமது அமைச்சில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தின் இறுதியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:-

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்று ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும்.

இவர்களுக்கு இதற்கான அழைப்புக்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டன. இந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தற்பொழுது யாழ்.நகரில் தங்கியுள்ள போதிலும் இக்கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை.

இவர்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தவர்கள் அபிவிருத்தியே தேவையில்லை என்று தெரிவித்தவர்கள்.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் மற்றும் புத்தளத்திலுள்ள யாழ்.முஸ்லிம்களை தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளிலும் இவர்கள் புறக்கணித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கும புத்தளத்திலுள்ள முஸ்லிம்களுக்கும எமதுகட்சி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவர்களைக் கலந்து கொள்ளச் செய்யும் பொருட்டு நான் நேரடியாகவே தொலைபேசி மூலம் அவர்களுக்கு அழைப்பு விடுக்கவுள்ளேன். ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளர் என்ற வகையில் யாழ்.அரசாங்க அதிபரும் இது தொடர்பாக அவர்களுக்கு அழைப்பு விடுக்கவுள்ளார்.

இந்த எம்.பிக்களின் திட்டங்கள் தற்பொழுது கோவைகளில் வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் அடுத்து வரும் கூட்டங்களில் கலந்து கொண்டால் இவர்களின் திட்டங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

இவர்கள் தமது தார்மீகக் கடமைகளை உணர்வதாகத் தெரியவில்லை. அதனால்தான் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருக்கிறார்கள் - என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. முக்கியஸ்தருமான எஸ்.தவராசா இச் சந்திப்பின் போது கூறியதாவது:-

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சு அலுவலகத்திலேயே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு விசேட அதிகாரங்களின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களில் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சுக்கு அலுவலகங்கள் திறப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்மாநகர சபைக் கூட்டத்தை தமது அலுவலகத்தில் நடத்தியது. நாம் அமைச்சு அலுவலகத்திலே ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை நடத்துகின்றோம்.

இந்த வருடம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 2.5 மில்லியன் ரூபா வீதம் மொத்தம் 225 மில்லியன் ரூபா யாழ். தேர்தல மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்று தெரிவித்தார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ்.ஜயாத்துரை நன்றியுரை வழங்கும் போது கூறியதாவது:-

இன்று நடைபெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு யாழ்மாவட்டத்திலுள்ள சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் வருவார்கள்; அவர்களிடம் கிளிநொச்சி மக்களின் தேவைகள் பற்றி எடுத்துரைகலாம் என்று எதிர்பார்த்தேன்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பல உதவிகளைச் செய்து வருகிறார்.

யாழ்மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களில் பலர் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கிறார்கள். எனவே யாழ்.மாவட்ட அபிவிருத்தி நிதியின் ஒரு பகுதி அங்கு ஒதுக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ அரிசி 40 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. வன்னியில் ஒரு கிலோ 15 - 16 ரூபாவுக்கு விற்பனையாகிறது.

அங்குள்ள மக்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணம் போதாமலிருக்கின்ற போதும் அரிசி விலை குறைவாக இருப்பதால் சமாளித்துக் கொள்கிறார்கள் - என்றும் கூறினார்.

(ஐ-5-4-6)

## செஞ்.அதிகாரி வருகை

யாழ்ப்பாணம்,மே18

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைமை அலுவலகத்தின் பேச்சாளரான ஹர்ஷா குணவர்த்தனா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

நாளை காலை 9 மணிமுதல் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை அவா இணுவில் ஆஸ்பத்திரியில் நடத்துவார்.

ஊனமடைந்தவர்களுக்கு 'பொலி புறோப்பிளேன்' மூலம் செயற்கை அவயங்கள் வழங்கும் செயற்பாடுகள் குறித்தும் -

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் குறித்தும் அவா அங்கு விளக்கம் அளிக்கவிருக்கின்றார். (உ-3)

## கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலனோம்புச் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு புலோலியில் இயங்கும் பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(உ-117)


உ

சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷ வருடம் வைகாசி மாதம் 06 ஆம் நாள் (19 – 05 – 2001) சனிக்கிழமை பகல் 12.10 முதல் 1.10 மணி வரையுள்ள சிங்க இலக்கினம் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

*எமது கனிஷ்ட புத்திரன்*
*திருநிறை செல்வன்*
**இராஜேஸ்வரன்**
(விரிவுரையாளர், IBMS கணனி நிறுவனம்)
அவர்களுக்கும்



*எமது ஏக புத்திரி*
*திருநிறை செல்வி*
**குகப்பிரியா**
(ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையோடு திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், மணமகள் இல்லத்தில் நிகழும் மாங்கல்யதாரண விவாக சோபன வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடத்தப்படும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

**திரு.திருமதி சின்னத்தம்பி &**
**திரு.திருமதி சிவயோகநாதன்.**
மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (87944)

இருவீட்டார் அழைப்பு

**திரு.திருமதி இரத்தினசிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
நீர்வேலி வடக்கு - நீர்வேலி.

# நாளை....

## வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாட்டில்

மத்திய, மாகாண அரசுகளின் கீழ் இயங்கும் அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் யாழ்.மக்கள் கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாபெரும்

# மக்கள் குறை நிவிர்த்தி சேவை

**இடம் : யாழ்.மத்திய கல்லூரி.**

**காலம்: 19.05.2001 சனிக்கிழமை, காலை 9.30 மணிமுதல் 20.05.2001 ஞாயிற்றுக்கிழமை.**

கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, கல்வி, சுகாதாரம், பொது நிர்வாகம், ஓய்வூதியம், வேலைவாய்ப்பு வங்கி, அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வங்கி, போக்குவரத்து என அனைத்துத் துறைகளிலும் சேவைகளை ஓர் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை பெறுவோர் புகைப்படப் பிரதிகளுடன் பிறப்பை அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்களுடன் சமுகமளிக்கவும்.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்திகாண மத்திய, மாகாண அரசுகளின் கீழ் பணியாற்றும் அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொள்கின்றார்கள்.

## அன்பிற்கினிய யாழ்.மக்களே!

உங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உங்கள் பிரச்சினைகளை தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதி, தேவையான ஆவணங்களுடனும்

**மக்கள் குறை நிவிர்த்தி சேவைக்கு வாருங்கள்!**
**உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள்!**

விளம்பர உதவி: *ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)* (87943)

# சதுரங்கப் போட்டிகளில் யாழ். இந்து, மகாஜன முன்னணி

## நாளை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 18

ஹற்றன் நஷனல் வங்கி ஆதரவில் யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய 8 ஆவது சதுரங்கச் சுற்றுப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரி அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

கடந்த 4 ஆம், 5, ஆம் திகதிகளில் நடந்து முடிந்த இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவுகள் அனைத்திலும் யாழ். இந்துக் கல்லூரி வெற்றியீட்டி உள்ளது பெண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்றது. ஆரமபப் பிரிவுப் போட்டிகளை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை வென்றது.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக உதயன் சஞ்சிகை இணை ஆசிரியர் ந. வித்தியாதரன் கலந்து கொள்வார்.

முதலாம், இரண்டாம் இடங்களில் வெற்றி பெற்ற பாடசாலைகள் மற்றும் தனி நபர்களின் விவரம் முறையே வருமாறு:-

பாடசாலை அணி முடிவுகள்:-

**16 வயது மேல் - ஆண்**

★ யாழ். இந்துக் கல்லூரி

★ மகாஜன கல்லூரி

**16 வயது மேல் - பெண்**

★ மகாஜன கல்லூரி

★ கொக்குவில் இந்துக் கல்லூரி.

**16 வயது கீழ் - ஆண்**

★ யாழ். இந்துக் கல்லூரி

★ மகாஜனக் கல்லூரி

**16 வயது கீழ் - பெண்**

★ மகாஜனக் கல்லூரி

★ மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி.

தனி நபர் முடிவுகள்:-

**14 வயது கீழ் - ஆண்**

சிவானந்தன் யோகானந் (யாழ். இந்து) மகாலிங்கம் அருளினியன (யாழ். இந்து).

**14 வயது கீழ் - பெண்**

அஸ்வினி திருச்செல்வம் (வட இந்து மகளிர்) ராதிகா சிவானந்தன் (இந்து மகளிர்).

**12 வயது கீழ் - ஆண்**

நகுலநாதன் லவலோஜன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) கோபிநாதன் சத்திய சீலன் (யாழ.இந்து ஆரம்பப் பாடசாலை).

**12 வயது கீழ் - பெண்**

கௌசிகா நகுநாதன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) கஸ்தூரிகா சற்குணபாலன் (யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை).

இப் போட்டிகளில் 19 பாடசாலைகளைச் சேர்ந்த 36 அணிகளும் 379 தனி நபர்களும் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் பதவிக்கு ஆசைப்படாமல் மக்களுக்காகப் பணி புரிகின்றோம்!

## சரோஜினி நினைவுக் கூட்டத்தில் ஆனந்தசங்கரி உரை

யாழ்ப்பாணம், மே 18

அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு அரசியலில் இருந்திருந்தால் நாங்கள் எப்போதோ எத்தனையோ பதவிகளை வகித்திருப்போம். ஆனால் தந்தை செல்வா போன்ற எமது தலைவர்கள் காட்டிய இலட்சியப் பாதையில் செல்வதாலேயே பதவி ஆசை அற்றவர்களாக மக்களுக்கு சேவை செய்து வருகிறோம்.

—இவ்வாறு கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி.

— முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் அமரர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினக் கூட்டம் யாழ். மாநகர முதல்வர் ரவிராஜ் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய போதே ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:

பதவிக்கு ஆசைப்படாமல் புனிதமான மக்கள் சேவையில் ஈடுபட்டு, இன்று எம்மை பிரிந்துவிட்ட யோகேஸ்வரன் தம்பதியினர் எமது நெஞ்சங்களில் வைத்து நினைவு கூரப் படவேண்டியவர்கள்.

இன்று ஆடம்பர வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கும் ஈ. பி. டி. பியினர் தீவுப்பகுதியை அடிமைபபடுத்தி வைத்திருக்கின்றனர்.

தீவகத்திலே இரண்டு, மூன்று மனைவிமாரை வைத்துக் குடும்பம் நடத்திக்கொண்டிருப்பவர்கள் வெளியிலே நல்லவர்கள்போல நடமாடுகிறார்கள்.

இன்றைய எமது நிலைப்பாடு குறித்து பத்திரிகைகளில் வேறுபட்ட செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சு ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை உருவாகியிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில அந்தப் பேச்சுக்களைக் குழப்பும் வகையில அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அமைந்துவிடக் கூடாது என்பதற்காகவே நாம் ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு கொடுக்க மறுத்தோம்.

நாங்கள் நினைத்தால் அரசாங்கத்தைக் கவிழ்க்கவும் முடியும்; ஸ்ரீதர் தியேட்டரை மூடவும் முடியும். ஆனால் தற்போது தென்படும் சமாதானத்துக்கான ஒளிக்கீற்றுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில செயற்படுவதற்கு நாம் விரும்பவில்லை.

அந்த ஒளிக்கீற்று மறையும் சந்தர்ப்பத்தில் நாம் என்ன முடிவு எடுப்போம் என்பதைப் பின்னர் அறிந்துகொள்ள முடியும்.

### பத்திரிகை ஆசிரியர்கள் விளக்கத்தேவையில்லை

பத்திரிகைகள் இன்று தமக்கு ஏற்றவாறு செய்திகளைப் போட்டுக்கொண்டிருக்கின்றன ஐக்கிய தேசியக்கட்சியின் திட்டத்துக்கு நாங்கள் ஆதரவு வழங்காதது பற்றி பத்திரிகை ஆசிரியர்களும், தவராசா எம்பியும் எமக்கு விளக்கம் தரத்தேவையில்லை அரசியலில் நாங்கள் எவ்வளவோ அனுபவங்களைப் பெற்றுள்ளோம். எந்த நேரம் எந்த முடிவு எடுக்க வேண்டும் என்பது எமக்கு நன்றாகத் தெரியும்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் ஆட்சி வந்தாலும் நாங்கள் சாதாரணமாக நடந்து செல்வோம் ஆனால் ஈ. பி. டி. பி.யினர் தலை தெறிக்க ஓடி ஒளிந்து விடுவார்கள்—என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தனதுரையில்—

மக்கள் மத்தியில் மக்களோடு மக்களாக இருந்து சேவையாற்றி வந்த யோகேஸ்வரனின் மறைவுக்குப் பின்னர் அவரது வழியில் சேவையாற்றிய திருமதி யோகேஸ்வரன் கடமை உணர்வுடன் பணிபுரிந்து வந்தாரெனினும் அவர்தம் சேவைகள் தொடர முடியாமல் போனது எமது துரதிஸ்டமே ஆகும்.

இந்த நாட்டில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்துக்குநாம்எவ்வளவோ தலைவர்களின் உயிரை விலையாகக் கொடுத்திருக்கின்றோம். எவ்வளவு இழப்புக்கள் வந்த போதிலும் நாம் மக்கள் சேவையிலிருந்து ஒதுங்கிவிடப் போவதில்லை.

அண்மையில் மாவனல்லவில் இடம்பெற்ற — முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிரான வன்முறைகள், இன்று மட்டக்களப்பில் இரண்டு முஸ்லிம்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டமை என்பன சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக சிங்கள இனவாதக் கும்பல்கள் செய்கின்ற அடாவடித்தனங்களையே காட்டுகின்றன — என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவமகாராசா தனதுரையில் —

இதய சுத்தியுடன் பணிகள் செய்து வந்த திருமதி சரோஜினிதேவி எம்மை விட்டுப் பிரிந்தாலும் கூட அவரது விடுதலை வேட்கை என்றைக்குமே இந்த மண்ணையும் மக்களையும் விட்டு அகலாது.

அவரது வழியில் சேவையாற்றி வரும் எங்கள் செயற்பாட்டை மழுங்கடிப்பதற்காக சில சக்திகள் முயன்று கொண்டிருக்கின்றன. எமது உரிமைகள் பெறப்படும் வரை எந்தச் சக்திகளாலும் எம்மை அடக்கி ஆளமுடியாது என்பதையும் கூற விரும்புகின்றேன் — என்றார்.

இந்த நினைவுக் கூட்டத்தில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஹமீத், யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் செ. கந்தையன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

# வளர்ப்புக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்க ஏற்பாடு

வலிகாமம் தெற்கு, மே 18

அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கான கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மூலம் விரைவில் வளர்ப்புக் கோழிக்குஞ்சுகள் விநியோகம் செய்யப்பட உள்ளன.

கோழி வளர்ப்பில் ஆர்வமுடையவர்கள் மேற்படி சங்கத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட ஒழுங்கின் படியே கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும் எனவும் — புதிய அங்கத்தவர்களாக சங்கத்தில் சேர்ந்து கொள்பவர்கள் உரிய படிவத்தைப் பெற்று நிரப்பி சமர்ப்பிக்குமாறும் —

விரைவில் கோழிகளுக்கான கோழித்தீன் மற்றும் மருந்து வகைகள் விநியோகமும் மேற்கொள்ளப்பட இருப்பதாகச் சங்கத்தின் முகாமையாளர் சபாரத்தினம் சரத்குமார் தெரிவித்துள்ளார். (ஐ-152)

# மானிப்பாய்ப் பிரதேச சபையின் மாதகல் உப அலுவலகக் கட்டடம்

## பெரியவிளானில் அமைக்க ஏற்பாடு

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் முற்றாக அழிவடைந்துள்ள மானிப்பாய்ப் பிரதேச சபையின் மாதகல் உப அலுவலகத்தை பெரியவிளான் பகுதியில் புதிதாக நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய்ப் பிரதேச சபையில், பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய இடத்தில் உப அலுவலகத்தை அமைக்கும் தீர்மானம் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

சுமார் 15 முதல் 20 லட்சம் ரூபா செலவில் கட்டப்படவுள்ள இக்கட்டடத்திற்குரிய நிதியை வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இருந்து பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது இதேவேளை கட்டடத்தைக் கட்டுவதற்குரிய காணியினை பிரதேச சபையின் நிதியிலிருந்து கொள்வனவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இக்கூட்டத்தில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சன சமூக நிலையத் தலைவர்கள், சமாதான நீதிவான்கள், விவசாயச் சம்மேளனங்களின் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாதகல், பண்டத்தரிப்பு, சிறுவிளான், இளவாலை, மாரீசன்கூடல், மாசியப்பிட்டி ஆகிய ஊர்களுக்கு மத்தியில் பெரியவிளானில் மாதகல் உப அலுவலகத்தின் புதிய கட்டடம் அமைக்கப்படுவதால் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சென். ஜோன்ஸ் படைப் பிரிவு தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 18

அடுத்த மாதம் 23 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சென். ஜோன்ஸ் படைப் பிரிவு தினத்தை ஒட்டி யாழ். மாவட்டத்தில் சிரமதானப் பணிகள், மரம் நாட்டும் விழாக்கள் இலவச மருத்துவ முகாம்கள் என்பன நடத்தப்படவுள்ளன.

இப்பணிகள் அடுத்த மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-173)

# மக்கள் மீள் குடியமர்வு குறித்து ஆராய விசேட உயர்மட்ட மாநாடு

யாழ்ப்பாணம், மே 18

தென்மராட்சி மற்றும் கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்களை மீண்டும்தமது சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது.

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் விரைவில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், தற்போது இடம்பெயர்ந்த நிலையில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்க்கப் படவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில், அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள், படைத்தரப்பினர் ஆகியோருடன் இடம்பெயர்ந்தோர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிரமதான நடவடிக்கை மூலம் பாதீனியக் களைகள் ஒழிப்பு

மருதனார்மடம், உடுவில் பிரதேசங்களில் வளர்ந்துள்ள பாதீனியம் செடிகள் கடந்த இரண்டு தினங்களாக அழிக்கப்பட்டு வருகின்றன.

மருதனார்மடம் சந்தியை அண்டிய பகுதியிலும், மருதனார்மடம் —உடுவில் வீதியின் இரு கரையோரங்களிலும் பரந்து வளர்ந்திருந்த பாதீனியம் செடிகள் சிரமதானம் மூலம் அழிக்கப்பட்டு வருகின்றன

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த வாரம் நியமனம் பெற்ற தொழிற்பயிற்சி அபிவிருத்தி தொண்டர்கள் சுமார் நூறு பேர் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிற்பயிற்சி அபிவிருத்தித் தொண்டர்களுடன் இணைந்து இப் பகுதி பொது மக்களும் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதுடன் தொண்டர்களுக்கான தாகசாந்திகளையும் அளிந்து உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை—

பாதீனியம் ஒழிப்பு முயற்சியில் யாழ். மத்திய கல்லூரி விஞ்ஞான மன்ற மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

முதற்கட்டமாகக் கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் 150 மாணவர்கள் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சென்று பாதீனியம் செடிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பாதீனியம் அதிகமாகக் காணப்படும்நிலாவரைப்பகுதி மற்றும் கோப்பாய்ப் பகுதியிலேயே மாணவர்கள் களை ஒழிப்பில் தீவிரமாக ஈடுபட்டனர். (க-152-86-72)

# கம்பன் கழக ஒன்றுகூடல்

அகில இலங்கைக் கம்பன் கழக ஆர்வலர்களுக்கான ஒன்றுகூடல் இன்று (18-05-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கம்பன் கழக அன்பர்கள் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

க. சிவராமலிங்கம்.

28, குமாரசுவாமி வீதி,
சுந்தர்மடம். (சி/16754)

# பாராட்டுகின்றோம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்விஅமைச்சின்ஆரம் பக்கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட ஆரம்பக்கல்விஆசிரியர்களுக்கிடையிலான சிறுகதையாக்கல் போட்டியில் யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய ஆசிரியை

## திருமதி விமலாதேவி கணேசன்

இரண்டாவது இடத்தைப் பெற்றார். இவருக்கான பரிசையும், சான்றிதழையும் வடக்கு - கிழக்குமாகாண ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் **திரு இ. இராஜேஸ்வரன்** அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

திருமதி கணேசனைப் பாராட்டுவதோடு அவரது இலக்கியத்திறன் மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/ சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்**
(சி/16747)

# அவசர கலந்துரையாடல்

கொழும்புத்துறை வாழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 21-05-2001 திங்கள் காலை 10.00 மணியளவில் (பு.நே.) கொழும்புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத்தொகுதி அமைப்பாளரும், ஈ.பி.டி.பியின் இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பானவரும், வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவருமான **திரு. ந. திரிலோகநாதன்** கலந்துகொள்வார். இக்கலந்துரையாடலில் கொழும்புத்துறை வாழ் மக்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

**கொ. மே. இந்து இளைஞர் மன்ற நிர்வாகம்**

கொழும்புத்துறை (சி/16753)

# பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. மணநீக்கம் / 206

சிவாபசுபதி பெண்மல்லிகா
பிள்ளையார் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
வழக்காளி

எதிர்

முத்துக்குமாரன் சிவாபசுபதி
411/2, கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
எதிராளி

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் 2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் திகதி மாவட்ட நீதிபதி திரு. இ. த. விக்னராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டபோது வழக்காளியும் அவரது பதிவு பெற்ற சட்டத்தரணி திரு. சி. வீரகத்திப்பிள்ளையும் சமுகமாக இருக்க, எதிராளிக்கான அழைப்புக் கட்டளை 2001ஆம் ஆண்டு மாசி மாதம் 25 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு எதிராளி சமுகமளிக்காத காரணத்தினால் ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்ட வழக்காளியின் பிராது, வ 1 எனும் ஆவணம், வழக்காளியின் சாட்சியம் என்பன பரிசீலனை செய்யப்பட்டு வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெற வழக்காளி தகுதி உடையவரென மன்று திருப்தியடைந்ததால்வழக்காளிக்கும்,எதிராளிக்கும் இடையே 1994ஆம்ஆண்டு தை மாதம் 23 ஆம் திகதி நடந்த திருமணத்தின் போதுவழக்காளியிடம்எதிராளி சீதனமாகப் பெற்றுக் கொண்டதெனக் கூறப்படும ரூபா 4,00,000 ஐயும் வழக்காளி எதிராளிக்கு எதிராகச் சட்டப்படி பெறும் உரிமையை வைத்திருக்கும் வகையில் எதிராளி வன்ம உறவறுப்புச் செய்த காரணத்திற்காக இத்திருமணத்தை ரத்துச்செய்து வெற்றும் வெறிதுமாக்கித் தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வை பற்றிய அறிவித்தல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதகாலத்திற்குள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதவிடத்து முற்றான தீர்வையாக்கப்படும் என தீர்ப்பும் கட்டளையும் வழங்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்பட்ட பின் வழக்காளி தனது கன்னிப்பெயரைப் பாவிக்கலாம் என்றும், திருமணமாகாத பெண்கள் சட்டத்தின் கீழ் அனுபவிக்கும் சகல உரித்துக்களையும் அனுபவிக்கலாம் என்றும் தீர்ப்பும், கட்டளையும் வழங்கப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் திகதி

வரைவு:
சி. வீரகத்திப்பிள்ளை
வழக்காளியின்
சட்டத்தரணி.

ஒப்பம்:
இ. த. விக்னராஜா
மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

மன்றின் கட்டளைப்படி.
து. ஸ்ரீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம். (87872)

# சந்தை வாய்ப்பைப் பெறும் வகையில் விவசாய உற்பத்திப் பொருள்களை பதனிட்டு வைக்கத் தொழிற்சாலை

## உடுவிலில் கட்டடம் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, மே 18

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் உதவியுடன் உடுவில் கிராமத்தில் விவசாய உற்பத்திப் பொருள்கள் பதனிடும் தொழிற்சாலையொன்றைஆரம்பித்துநடத்த உள்ளது.

இதற்காக உடுவில்— மானிப்பாய் வீதியில் ஆலடியில் உள்ள சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

வலிகாமப் பிரதேசத்தில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் மாம்பழங்கள், தக்காளிப் பழங்கள் போன்றவற்றை வாங்கி, அவற்றைப் பதனிட்டு விநியோகிப்பதன் மூலம் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பை உற்பத்தியாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கருதப்படுகின்றது.

விவசாய விளைபொருள் பதனிடும் தொழிலுக்குத் தேவையான 20 லட்சம் ரூபா பெறுமதியுடைய இயந்திரங்களைப் பட்டினிக்கெதிரான நிறுவனம் வழங்க உள்ளது. அத்துடன் உணவுப்பொருள்கள் பதனிடுதல் சம்பந்தமான தொழிற் பயிற்சிகளையும் பட்டினிக்கெதிரான நிறுவனம் வழங்கும். தொழிற்சாலையின் மேற்பார்வையாளராகவும் சில காலம் அது தொழிற்படும் எனத் தெரிய வருகின்றது.

தொழிற்சாலையை அமைப்பதற்கான கட்டடத் திருத்த வேலைகளுக்கெனச் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் நான்கு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. அடுத்த மாதத்தில் தொழிற்சாலைப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(க-152)

## ஓவியப் போட்டியில் வென்ற ஆசிரியர்கள்

தீவகப்பாடசாலை ஆசிரியர்களுக்கான வலயமட்ட ஓவியப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற ஆசிரியர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த ஆசிரியர்களின் பெயர், விவரம் நிலை வரிசைப்படி வருமாறு:-

ஞ. ஷர்மிளா கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி, இ. புவனேஸ்வரி ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை, ஐ. செல்வராணி புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், சா. கவிதா நயினாதீவுஸ்ரீகணேசா வித்தி., ந. சிவாஜினி காரைநகர் வியாவில் சைவ வித்தி.

இவர்களுக்கான சான்றிதழ்கள் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதேவேளை —

மாணவர்களுக்கான வலயமட்ட ஓவியப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறும் என்று தீவகக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

## வலிகாமத்தில் அதிபர் பதவிகள்

யாழ்ப்பாணம், மே 18

வலிகாமம் கல்வி வலயத்தில் வெற்றிடமாக உள்ள சில பாடசாலை அதிபர்களுக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், ஏழாலை மகாவித்தியாலயம், ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவிகளே நிரப்பப்பட உள்ளன.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர்கள் சேவை தரங்களை உடையவர்களாக இருப்பதுடன், உரிய விண்ணப்பப் படிவங்களில் தமது விண்ணப்பங்களை நிரப்பி எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும் என வலிகாமம் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

(க-152)

## பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மே 18

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக நடமாடும் செயலக சேவை, எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் புலோலியில் அமைந்துள்ள பளைப் பிரதேச செயலகத்திற்கு அருகிலுள்ள பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது பளைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களின் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுமென பளைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(க)

# சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

## வடமராட்சிக் கிளை

# பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் நாளை (19-05-2001) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, வடமராட்சித் தலைவர் - பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள் தலைமையில் மாலிசந்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் வந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

**வடமராட்சித் தலைவரும், நிர்வாகமும்.**
(87920)

# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலயக்கல்விப் பணிப்பாளர்
**உயர்திரு. வீ இராசையா**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிக் கழகம்,**
**வலிகாமம் கல்வி வலயம்,**
**மருதனார்மடம்.**
(சி/16648)

# மரண அறிவித்தல்

## கதிர்காமு அப்புத்துரை

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த கதிர்காமு அப்புத்துரை அவர்கள் நேற்று (17-05-2001) வியாழக்கிழமை இந்தியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், வசந்தராணி (கிளிநொச்சி), வரதராசா (இத்தாலி), கதிர்காமராசா (ஜேர்மனி), யோகராசா (பிரான்ஸ்), தவராணி (ஜேர்மனி), சிறிகாந்தராசா (பிரான்ஸ்), ஆனந்தராசா (ஆசிரியர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), தங்கராணி (பிரான்ஸ்), நடராசா (சுவிஸ்), பத்மராசா (இந்தியா), கிருஷ்ணராசன் (பிரான்ஸ்), அருள்தேவி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஸ்வநாதன், செல்வமலர், ஈஸ்வரி, லோகநாயகி, தனபாலசிங்கம், சுபாஜினி, சசிகலா, தர்மராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், தர்மலிங்கம், பராசக்தி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான சிவசுப்பிரமணியம், பேரம்பலம் மற்றும் சச்சிதானந்தசிவம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஆனந்தராசா
(மகன்)

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(87910)

## உதயன்

### குழப்பும் சதி

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருந்தவேளை, அங்கு - கொக்காவிலில் - கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டமை பெரும் துரதிர்ஷ்டமான சம்பவமாகும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் வாகன அணியை இலக்கு வைத்தே மேற்படி கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது. எனினும் அவருக்கு பாதிப்பு எதுவும் இல்லை.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும் என்று மக்கள் எதிர்பார்த்த வண்ணம் காத்திருக்கின்றார்கள். காலம் மெல்ல மெல்லக் கடந்து போகிறது; விரைவில் கனியாதா என்று ஏங்குகிறார்கள்.

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதை நிச்சயப்படுத்தக்கூடிய அது சம்பந்தமான உயிர் நாடியாக விளங்குபவர் சொல்ஹெய்ம். முரண்பட்டுக்கொண்டு நிற்கும் இரு தரப்புக்களையும் மேசைக்கு அழைத்துச் செல்லும் பெரும் கஷ்டமான பணி அவருடையது. அவரது பேச்சு நடத்தும் வல்லமையும் சமயோசிதமாக விடயங்களைக் கையாளும் திறமையும் புத்தி சாதுரியமும் விடா முயற்சியும் அவர் இந்த விடயத்தில் "வெல்லுவார்" என்று நம்பிக்கையை ஊட்டியிருக்கின்றன.

வன்னியில் அவர் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நடத்தவிருந்த பேச்சுக்கள் இதுவரை இருந்த முட்டுக்கட்டைகளை விலக்க, பாதையைத் துப்புரவாக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தத் தருணம் பார்த்து தமிழ்ச்செல்வனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதல், பேச்சுவார்த்தைகள் நடைபெறாமல் குழப்புவதற்கான சதி முயற்சி என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இந்தச் சதியில் ஈடுபட்டவர்கள் வைத்த குறி தவறாதிருக்குமானால் விசேட தூதுவர் சொல்ஹெய்ம் முன்னெடுத்து வரும் சமாதானப் பேச்சுக்களில் பெரும் பின்னடைவு உண்டாகியிருக்கும். இரு தரப்பு போர்நிறுத்தம் கைக்கு எட்டாத ஒன்றாக மாறியிருக்கும். பேச்சுக்கான முயற்சிகள் நிச்சயமற்ற நிலையை எய்தியிருக்கும். அதிர்ஷ்டவசமாக அவ்வாறு நடைபெறவில்லை.

கொக்காவில் கிளைமோர்த் தாக்குதலுக்கு - பேச்சுவார்த்தை முயற்சிகளைக் குழப்பும் சதிக்கு - சூத்திரதாரிகள் யார் என்பது குறித்து ஊர்ஜிதமான - உறுதி செய்யப்பட்ட - தகவல்கள் இப்பத்தி எழுதப்படும் வரை கிடைக்கவில்லை; வெளியாகவில்லை.

சமாதானப் பேச்சுக்களை, போர் நறுத்தத்தை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதனை விரும்பாத தரப்பினரே, சக்திகளே இதனைச் செய்திருப்பார்கள் என்பது நிச்சயம். அந்தத் தரப்பினர் யார் என்று இனங்காணப்படுவது முக்கியம்.

எந்தவொரு நல்ல காரியத்தையும் செய்பவர்களுக்கு எதிர்ப்பும் பல்வேறுவகை சோதனைகளும் வருவது வழக்கம்; இயல்பு. அதில் சம்பந்தப்படுவோர் பல நெருக்கடிகளையும் எதிர்கொள்ள நேர்வதும் உண்டு.

இலங்கையில் மாறாத ரணமாக, மக்களுக்கு நீக்கல் இன்றி நோவையும் வலியையும் தந்து அவர்தம் வாழ்வை நிரந்தர நோயாக மாற்றியுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை எப்போதும் இல்லாதவாறு பல தரப்புக்களும் இப்போது உணர்கின்றன.

அரசு - புலிகள் பேச்சுவார்த்தையானது, தீர்வு காணும் இலக்கு நாடிய அத்தியாவசிய செயற்பாடாகும். அதற்கான காலம் கனிவதை தடுக்க முயல்வோர் போரினால் தத்தமக்கு கிடைக்கும் லாபங்களையும் நலன்களையும் இழக்க விரும்பாதாரே...!

சமாதான முயற்சி, நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் அனுசரணைப் பணி வெற்றி பெறப் பிரார்த்திப்போமாக.

# நினைத்த நேரத்தில் மின்வெட்டு; சுன்னாகம் பகுதி மக்கள் பாதிப்பு

சுன்னாகம்,மே18

சுன்னாகம், உரும்பிராய், உடுவில் பகுதிகளில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் மின் வெட்டுகள் காரணமாக. அப்பகுதி மக்கள் பெரிதும் விசனமுற்றுள்ளனர்.

எந்த நேரம் என்றில்லாமல் அடிக்கடி மின்வெட்டு இடம்பெற்று வருவதாகவும் இரவுவேளை 5 மணி நேர மின்வெட்டு ஒன்றுவிட்ட ஒரு தினத்துக்கு வழக்கமாக மேற்கொள்ளப்படுவதாகவும் -

மின் வழங்கப்படும் இரவுகளிலும் கூட இரண்டு தடவை குறுகிய நேர மின்வெட்டு மேற்கொள்ளப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இது தொடர்பாக, இலங்கை மின்சார சபைக்கு மகஜர் ஒன்றை கையளிப்பதற்கு பொதுமக்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(சு-27)

## தெய்வீக ஸ்தலங்களில்



யாழ். வண்ணை ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற அலங்கார உற்சவத்தின் போது நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. போட்டி ஏற்பாட்டாளர்கள் மத்தியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். சைவ பரிபாலன சபைத் தலைவர் 'சுடர்' இ.மகேந்திரன் அமர்ந்திருப்பதையும் விழாத் தலைவர் அ.பகீரதன் தலைமையுரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (ஐ)



யாழ். அதியடிப் பிள்ளையார் கோயில் மஹோற்சவம் அண்மையில் நடைபெற்றபோது தொடர்ந்து 10 நாள்களும் பெரியபுராணம் பேருரை நிகழ்த்திய ஆசிரியர் இரா.செல்வவடிவேலுக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும், ஆலய நிர்வாக சபைத் தலைவர் து.கனகசபை, ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்குவதையும் படங்களில் காணலாம். (ஐ-9)



இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் அண்மையில் நடைபெற்றது. ஐந்தாம் திருமுறையின் ஆரம்ப நாள் நிகழ்வில் ஆலய பிரதமகுரு அடியார்களுக்கு காளாஞ்சி பிரசாதம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)

# சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே18

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்கறிஞர் சங்கம் சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடும் முகமாக நாடளாவிய ரீதியில் கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டிகளை நடத்தவுள்ளது.

சிறுவர் உரிமைகள் பற்றிய முழுமையான அறிவைப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இப்போட்டிகள் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படவுள்ளன.

12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் கனிஷ்ட பிரிவாகவும், 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் சிரேஷ்ட பிரிவாகவும் வகைப்படுத்தப்பட்டு, இரு பிரிவுகளாகப் பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவரங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.(சு-27)

## நாட்டு நடப்பு

வெளி நாட்டால் வந்திருந்தான் வேனு<br>
விவாகங்கள் பேசி வந்தார் நூறு<br>
சுழிபுரத்து புறோக்கர் துணையாலே<br>
சுந்தரிக்கு திருமணமுமாச்சு<br>
படுக்கைக்குப் போன முதல் இரவு<br>
பவுடர் ஒன்றைத் தானிழுத்தான் வேனு<br>
அடுத்த நாள் மதியம் கண்விழித்த போது<br>
அவள் போய் விட்டாள் தன் சொந்த வீடு.

- *மு.திருநாவுக்கரசு.*

# கோதுமையுடன் வந்த கப்பல் திருமலைக் கடலில் விபத்து!

கொழும்பு,மே18

52 ஆயிரத்து 500 தொன் எடையுள்ள கோதுமையுடன் வந்த கிரேக்கக் கப்பல் திருகோணமலைத் துறைமுகத்திற்கு சமீபமாக பாறையொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதாக துறைமுக அபிவிருத்தி அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பிறிமா இறங்குதுறையில் கோதுமையை இறக்க முடியாமல் நேற்று மாலை வரை இக்கப்பல் கடலில் தரித்து நின்றது.

இதேவேளை, பிறிமா தொழிற்சாலையில் இன்னும் இரு நாள்களுக்குப் போதுமான மாவே கையிருப்பில் உள்ளதாகவும், இன்னும் ஒரு கப்பல் கோதுமை வருவதற்கு இன்னும் ஒரு மாதம் செல்லும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை -

துறைமுக அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலர் தயா விஜயசேகர, பாறையில் சிக்குண்டு நின்ற கப்பல், 'மகநுகர' என்ற மீட்புக் கப்பலின் உதவியுடன் மீட்கப்பட்டுவிட்டதாகவும், அதிலிருந்த 52,500 தொன் கோதுமையும் பத்திரமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், வழமைக்கு மாறாக கடலில் நிற்கும் கப்பலிலிருந்து முதலில் சிறுபடகுகளுக்கு கோதுமை இறக்கப்பட்டு பின்னரே அவை பிறிமா ஆலைக்குக் கொண்டு வரப்படலாம் என்பதால் மா விநியோகத்தில் தாமதம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே18

கைதடி விக்னேஸ்வர வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இம்மாதம் முதல் பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கிவருகின்றது.

இத்திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்துவது மற்றும் பாடசாலையில் பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புமாறு வலயக் கல்வித் திணைக்களத்தைக் கோருவது குறித்து ஆராய்வதற்காக ஒரு கலந்துரையாடல் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இக்கலந்துரையாடலில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் பங்குபற்றுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது. (க)

## கப்பலில் வந்த 428 தபாற் பொதிகள்

யாழ்ப்பாணம்,மே18

பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த சர்வதேச செஞ்சிலுவைக் குழுக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 428 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர் தபால்கள் அடங்கிய 47 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-6)

## நித்திரையிலிருந்த பெண்ணின் நகைகள் அபகரிப்பு

சுன்னாகம்,மே18

நித்திரையில் ஆழ்ந்திருந்த பெண்ணின கழுத்தில் இருந்த தங்க நகைகள் அபகரிக்கப்பட்ட சம்பவம் கடந்த ஞாயிறன்று இரவு சுன்னாகம் சூராவத்தைப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவ தினம் குறித்த பெண் வீட்டில ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் உட்புகுந்த திருடர்கள் கழுத்தில் இருந்த நகைகளை வெட்டியெடுத்துச் சென்றுவிட்டதாகவும் -

விடிந்த பின்னரே நகைகள் திருடப்பட்ட விடயம் தெரிய வந்தது எனவும் கூறப்பட்டது. (சு-27)

## நாளை

வைகாசி 5<br>
சனிக்கிழமை<br>
திதி: ஏகாதசி<br>
முற்பகல் 9.08 வரை<br>
நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>
முற்பகல் 9.38 வரை<br>
ஏகாதசி விரதம்<br>
சுபநேரம் : 2.52 - 4.22<br>
ராகுகாலம் : 8.52 - 10.22<br>
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உண்மைக்குப் பயப்படுபவன் வேறு எவருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



அன்று துலாவில் பட்டை கட்டி, வாய்க்கால் வெட்டி, தண்ணீர் பாய்ச்சிப் பயிர் செய்த விளைநிலத்தில் இன்று மண்ணுக்குள் மறைந்திருக்கின்றன "புதுச்செடிகள்" கவனம் அசட்டையாக இருந்தால் ஆபத்துகள் பல....

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 9ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சங்கானை

(178905ஏ) (183228ஏ) (188669ஏ)
(189327ஏ) (189387ஏ) (189433ஏ)
(189542ஏ) (189542பி) (190454ஏ)
(190597ஏ) (190597பி) (190622ஏ)
(190624ஏ) (190624பி) (190658ஏ)
(190658பி) (190681ஏ) (190681பி)
(190705ஏ) (190710ஏ) (191804ஏ)
(191804பி)

### யாழ்ப்பாணம்

(178160ஏ) (178160பி) (178160சி)
(178160டி) (179927ஏ) (179927பி)
(179927சி) (180086ஏ) (180086பி)
(186032ஏ) (186032பி) (186032சி)
(186205ஏ) (186205பி) (186205சி)
(186205டி) (186311ஏ) (186311பி)
(186311சி) (186311டி) (186311ஈ)
(188821ஏ) (188821பி) (188821சி)
(188822ஏ) (188982ஏ) (188982பி)
(189178ஏ) (189178பி) (189178சி)
(189178டி) (189209டி) (189239ஏ)
(189239பி) (189250ஏ) (189253ஏ)
(190757ஏ) (190770ஏ) (190770பி)
(190776ஏ) (190776பி) (190790ஏ)
(190852ஏ) (190928ஏ) (190928பி)
(190950ஏ) (190950பி) (190950சி)
(190973ஏ) (190975பி) (190993ஏ)
(190993பி) (190994ஏ) (190994பி)
(191022ஏ) (191022பி) (191022சி)
(191022டி) (191022ஈ) (191022எவ்)
(191177ஏ)

### கோப்பாய்

(187263ஏ) (189154ஏ) (189208ஏ)
(189208பி) (190964ஏ)

### நல்லூர்

(182244ஏ) (182244பி) (185939பி)
(185939சி) (185989ஏ) (186117ஏ)
(186243ஏ) (188886ஏ) (188886பி)
(188886சி) (189018ஏ) (189018பி)
(189069ஏ) (189069பி) (189069சி)
(189153ஏ) (189153பி) (189191ஏ)
(189201ஏ) (189251ஏ) (189251பி)
(190883ஏ) (190892ஏ) (190938ஏ)
(190939ஏ) (190949ஏ) (190953ஏ)
(190963ஏ) (191018ஏ) (191148ஏ)
(189403ஏ) (189466ஏ) (189466பி)
(190663ஏ) (190650ஏ) (190650பி)

### சண்டிலிப்பாய்

(185243ஏ) (186854ஏ) (186854பி)
(186934ஏ) (188628ஏ) (188628பி)
(188628சி) (188701ஏ) (188711ஏ)
(188711பி) (188711சி) (189599ஏ)
(189599பி) (190463ஏ) (190501ஏ)
(190501பி) (190546ஏ) (190564ஏ)
(190570ஏ) (190570பி) (190570சி)
(190599ஏ) (190600ஏ) (190600பி)
(190600சி) (190628ஏ) (190640ஏ)
(190660ஏ) (190660பி) (190665ஏ)
(190666ஏ) (190674ஏ) (190741ஏ)
(191754ஏ) (191754பி) (191837ஏ)
(191837பி) (191837சி) (191837டி)
(191838ஏ) (191846ஏ) (191846பி)
(191886ஏ) (192012ஏ) (194836ஏ)
(198492ஏ)

### தெல்லிப்பழை

(184866ஏ) (186991ஏ) (187195ஏ)
(188650ஏ) (190537ஏ) (190543ஏ)
(190543பி) (190543சி) (190706ஏ)
(190715ஏ) (191835ஏ) (191835பி)
(191875ஏ)

### உடுவில்

(179207ஏ) (179207பி) (180358ஏ)
(180358பி) (180359ஏ) (183129ஏ)
(186840ஏ) (186840பி) (186840சி)
(187088ஏ) (187088பி) (187088சி)
(187088டி) (187090ஏ) (187090பி)
(187090சி) (187090டி) (187090ஈ)
(187090எவ்) (187141ஏ) (187141பி)
(189318ஏ) (189338ஏ) (189419ஏ).
(189457ஏ) (189457பி) (189457சி)
(189457டி) (189477ஏ) (189477பி)
(189477சி) (189509ஏ) (189534ஏ)
(190557ஏ) (190633ஏ) (190690ஏ)
(190690பி) (190690சி) (190743ஏ)
(190743பி) (191755ஏ) (191756ஏ)
(191756பி) (191774ஏ) (191801ஏ)
(191801பி) (191801சி) (191802ஏ)
(191824ஏ) (192049ஏ) (192049பி)

இம்மாதம் 11ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் வருமாறு:-

### யாழ்ப்பாணம்

(101189ஏ) (174475ஏ) (179792ஏ)
(180043ஏ) (180043பி) (180043சி)
(180821ஏ) (180821பி) (180821சி)
(180821டி) (181989ஏ) (184670ஏ)
(184680ஏ) (184735ஏ) (184735பி)
(184735சி) (184735டி) (184749ஏ)
(184749பி) (184749சி) (185851ஏ)
(185851பி) (185907ஏ) (186012ஏ)
(186012பி) (186247ஏ) (186247பி)
(186314ஏ) (186314பி) (186314சி)
(188852ஏ) (188852பி) (188961ஏ)
(188961பி) (188986ஏ) (188986பி)
(188986சி) (1?9012ஏ) (189051ஏ)
(189051பி) (189051சி) (189051டி)
(189157ஏ) (189157பி) (189157சி)
(189157டி) (189157ஈ) (189161ஏ)
(189168ஏ) (189190ஏ) (189213ஏ)
(189241ஏ) (189263ஏ) (189263பி)
(189263சி) (189263டி) (189279ஏ)
(189279பி) (189292ஏ) (189292பி)
(189292சி) (189295ஏ) (189295பி)
(189299ஏ) (189615ஏ) (189638ஏ)
(189640ஏ) (189640பி) (189642ஏ)
(189642பி) (189642சி) (189652ஏ)
(190007ஏ) (190007பி) (190762ஏ)
(190762பி) (190762சி) (190769ஏ)
(190769பி) (190775ஏ) (190780ஏ)
(190791ஏ) (190797ஏ) (190809ஏ)
(190816ஏ) (190816பி) (190829ஏ)
(190829பி) (190835ஏ) (190843ஏ)
(190848ஏ) (190880ஏ) (190880பி)
(190880சி) (190886ஏ) (190894ஏ)
(190896ஏ) (190920ஏ) (190926ஏ)
(190926பி) (190927சி) (190927டி)
(190927ஈ) (190927எவ்) (190932ஏ)
(190933ஏ) (190934ஏ) (190934பி)
(190935ஏ) (190935பி) (190936ஏ)
(190936பி) (190942ஏ) (190942பி)
(190944ஏ) (190946ஏ) (190946பி)
(190946சி) (190946டி) (190952ஏ)
(190954ஏ) (190957ஏ) (190970ஏ)
(190970பி) (190974ஏ) (190979ஏ)
(190986ஏ) (190986பி) (190986சி)
(190987ஏ) (190999ஏ) (190999பி)
(191001ஏ) (191004ஏ) (191011ஏ)
(191011பி) (191011சி) (191023ஏ)
(191027ஏ) (191042ஏ) (191047ஏ)
(191057ஏ) (191057பி) (191061ஏ)
(191061பி) (191068ஏ) (191068பி)
(191068சி) (191068டி) (191071ஏ)
(191073ஏ) (191073பி) (191073சி)
(191085ஏ) (191085பி) (191093ஏ)
(191093பி) (191100ஏ) (191100பி)
(191123ஏ) (191123பி) (191127ஏ)
(191128ஏ) (191137ஏ) (191151ஏ)
(191151பி) (191154ஏ) (191156ஏ)
(191156பி) (191156சி) (191156டி)
(191167ஏ) (191167பி) (191173ஏ)
(191189ஏ) (191198ஏ) (191201ஏ)
(191202ஏ) (191207ஏ) (191219ஏ)
(191227ஏ) (191245ஏ) (191245பி)
(191245சி) (191245டி) (191984ஏ)
(191984பி) (193007ஏ) (193007பி)
(193007சி) (193007டி) (193007ஈ)
(193011ஏ) (193018ஏ) (193023ஏ)
(193023பி) (193024ஏ) (193045ஏ)
(193046ஏ) (193063ஏ) (193063பி)
(193065ஏ) (193078ஏ) (193080ஏ)
(193083ஏ) (193105ஏ) (193107ஏ)
(193111ஏ) (193117ஏ) (193117பி)
(193121ஏ) (193121பி) (193155ஏ)
(193271ஏ) (199007ஏ)

### கோப்பாய்

(184461ஏ) (185964ஏ) (190783ஏ)
(190783பி) (190783சி) (193086ஏ)
(193086பி) (193086சி)

### நல்லூர்

(148224ஏ) (148224பி) (148224சி)
(148224டி) (163054ஏ) (163054பி)
(163054சி) (173460ஏ) (173460பி)
(178076ஏ) (178076பி) (178076சி)
(178354ஏ) (178354பி) (180041ஏ)
(184335ஏ) (184335பி) (184335சி)
(184578ஏ) (185994ஏ) (186020ஏ)
(186034ஏ) (186034பி) (186034சி)
(186034டி) (186058ஏ) (186175ஏ)
(186203ஏ) (186203பி) (186203சி)
(186203டி) (186292ஏ) (186292பி)
(186292சி) (186292டி) (186321ஏ)
(187037ஏ) (188095ஏ) (188842ஏ)
(188842பி) (188861ஏ) (188861பி)
(188861சி) (188861டி) (188909ஏ)
(188909பி) (188909சி) (188909டி)
(188976ஏ) (188976பி) (188976சி)
(188976டி) (188994பி) (189024ஏ)
(189142ஏ) (189142பி) (189142சி)
(189162ஏ) (189218பி) (189265ஏ)
(189287ஏ) (189831ஏ) (190777ஏ)
(190784ஏ) (190784பி) (190789ஏ)
(190841ஏ) (190851ஏ) (190853ஏ)
(190864ஏ) (190864பி) (190869ஏ)
(190869பி) (190869சி) (190869டி)
(190874ஏ) (190874பி) (190874சி)
(190874டி) (190876ஏ) (190876பி)
(190876சி) (190910ஏ) (190918ஏ)
(190918பி) (190918சி) (190925ஏ)
(190925பி) (190927ஏ) (190927பி)
(190951ஏ) (190978ஏ) (190982ஏ)
(191031ஏ) (191031பி) (191031சி)
(191046ஏ) (191048ஏ) (191048பி)
(191066ஏ) (191079ஏ) (191079பி)
(191153ஏ) (191153பி) (191166ஏ)
(191215ஏ) (191215பி) (191215சி)

## இட நெருக்கடி காரணமாக

# யாழ். சிறைச்சாலையில் கைதிகளும் உத்தியோத்தர்களும் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், மே 18

யாழ்.சிறைச்சாலையில் போதிய இடவசதிகள் இன்றி கைதிகளும், சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கவலை தெரிவிக்கப் படுகின்றது.

70 கைதிகளை மட்டுமே தடுத்து வைக்கக்கூடிய இடவசதிகளைக் கொண்டமைந்த மேற்படி சிறைக் கூடத்தில் தற்போது 131பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இந்திய மீனவர்கள் 39 பேரும் அடங்குவர்.

இடவசதிகள் இன்றி பெரும் எண்ணிக்கையான கைதிகளைத் தடுத்து வைத்திருப்பதால் அவர்களுக்கு இடையில் சச்சரவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் -

கைதிகள் குளிப்பதற்கான வசதிகள இன்றியும்-மலசலகூட வசதிகள் இன்றியும்-படுக்கை வசதிகள் இன்றியும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (க-6-4)


## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விப் பணிப்பாளர்
திரு.வீ.இராசையா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மீனாட்சி வீரகத்தி**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகம்,
யா/அராலி இந்துக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(87903)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விப் பணிப்பாளர்
திரு.வீ.இராசையா அவர்களின் பாசமிகு அன்புத் தாயார்

**திருமதி மீனாட்சி வீரகத்தி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

(87892)



வலி.கிழக்கு பிரதேச சபையினால் நடத்தப்படும்

## கணனிப் பயிற்சி

*புதிய பிரிவு ஆரம்பம்*

**Diploma in PC Application**

1. Introduction to Hard Ware
2. MS Excel
3. MS Access
4. Corel Draw
5. Visual Basic

} 6 மாதம்

- இப்பயிற்சி நெறிக்கு க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த)பரீட்சையில சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- மிகக் குறைந்த கட்டணத்துடன், திறமைவாய்ந்த ஆசிரியர்களினால் பாடவிதானங்கள் பயிற்றுவிக்கப்படும்.
- செய்முறைப் பயிற்சிக்கு அதிக நேரம் வழங்கப்படும்.
- மாணவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவங்களை நேரடியாகவோ அல்லது தபால மூலமாகவோ தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
- விண்ணப்ப முடிவு திகதி: 23.05.2001
- மேலதிக விவரங்களுக்குத் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

*குறிப்பு:* எமது கிளை உரும்பிராய் உப அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட இருப்பதால் மாணவர்கள் தமது பதிவுகளை உரும்பிராய் அலுவலகத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திரு.பூ.குணசிங்கம்
தவிசாளர்.

*வலி.கிழக்கு பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,*
*நீர்வேலி.*

(C/16752)



## சர்வதேச இந்து மத குருபீடம்

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)
(REGED.NO. N/A/092)

**– ஸ்ரீ ஐயப்பன் குருகுலம் –**
(வேத - சிவாகம பாடசாலை)

ஆரம்பம்: **நாளை(19-05-2001)** சனிக்கிழமை நண்பகல் 12 மணி

இடம்: **ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம், கொழும்பு-13**

குருகுல உபாத்தியாயர்:

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள
'வைதீக கிரியா சிரோமணி'
பிரம்மஸ்ரீ N.R. ஸ்ரீநிவாச சாஸ்திரிகள்
சிவஸ்ரீ பா.ஷண்முகரெட்ணசர்மா J.P. மருதானை
(வித்வத்சபை போஷகர் சர்வதேச இந்துமத குருபீடம்)
சிவஸ்ரீ சதா.சுப்பிரமணியப் பட்டர் (ராமகான சபை)
(வித்வத்சபை ஆலோசகர் - சர்வதேச இந்துமத குருபீடம்)
பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் - நவாலியூர்
(வித்வத் சபைத் தலைவர் - சர்வதேச இந்துமத குருபீடம்)
சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள்
(சிவன்கோயில் பிரதம குரு)
(தலைவர் - இலங்கை சிவப்பிராமண சங்கம்)
சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்த சிவாச்சாரியார் - சுன்னாகம்
(ஆஸ்திரேலியா அமைப்பாளர்-சர்வதேச இந்துமத குருபீடம்)

*ஆகியோரின் அருளாசியுடன்*

'சர்வதேச இந்துமத குருபீடாதிபதி'
சிவாகம கலாநிதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P
*தலைமையில் குருகுல ஆரம்பவிழா நடைபெறும்.*

***பாடங்கள்:***
**மஹான் நியாசம், ஸ்ரீருத்ரம், சமகம், புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், சாந்தி பஞ்சகம், கணபதி உபநிஷதம், துர்க்கா சூக்தம், நீளா சூக்தம், ஆகம கிரியா விளக்கங்கள், பூர்வ - அபர - வைதீக கிரியா விளக்கங்கள்.**

சிவஸ்ரீ K.P. ராமநாதக் குருக்கள் — செயலாளர்
சிவஸ்ரீ க.சிவபாலக் குருக்கள் — (பொதுச் செயலாளர்)
சிவஸ்ரீ சி.தியாகராஜக் குருக்கள்
(செயலாளர் - குருகுலம்)

## சர்வதேச இந்துமத குருபீடம்

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)
90/22. ஜோசப் டயஸ் லேன்,
கொழும்பு -15.
T.P 072 - 422239 FAX - 527025

(C/16746)

# போதைக்கு எதிரான போரும்...

தென் அமெரிக்க நாடுகளான கொலம்பியா, பெரு, பிரேசில் போன்றவற்றில் தொடரும் போதைப் பொருள் வியாபாரம் நெடுங்காலமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது. பாரம்பரியமாக அப்பிரதேசங்களில் வளரும் கொக்கா(coca) செடிகள் போதைப்பொருள் உற்பத்தியின் மூலப்பொருள்கள் ஆகின்றன.

எமது வெற்றிலைப் பாரம்பரியம் போல அங்குள்ள மக்கள் கொக்கா இலைகளைச் சப்பி வருகிறார்கள். அவற்றில் இருந்து உற்பத்தி ஆகும் போதைப்பொருள் வியாபாரம் பெருமளவிலான வளர்ச்சி கண்டுள்ளது. இதனால் பல பெரிய புள்ளிகள் உருவாகி விடுகிறார்கள். தனிப்பட்ட விமானங்களையும் ஓடு பாதைகளையும் காட்டுப்பிரதேசங்களையும் இவர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார்கள். இதனால் அருகில் உள்ள அமெரிக்க நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தல் எழுவதாக நம்பப்படுகின்றது.

மு.சிவநேசன்

பல அப்பாவிகளையும் இந்தப் பிரச்சினை பெருமளவில் பாதித்து வருகின்றது. ஜிம் பவர்ஸ் (Jim Bowers) என்ற குடும்பஸ்தர் தனது மனைவி றொனியிடனும் (Rone) 6 வயதுப் புதல்வன் கோறியுடனும் (Cory) அமைதியான வாழ்க்கை நடத்துபவர். ஒரு பெண் குழந்தைக்கு ஆசைப்பட்டு Charity என்கின்ற குழந்தையைத் தத்து எடுத்து வளர்த்து இருந்தார். பெரு நாட்டின் ஊடே பாயும் அமேசன் நதிக்கரை ஓரம் உள்ள கிராமங்களின் ஊடே அவர் திரிந்த காலங்கள் பசுமையானவை. தனது புதிய பெண் குழந்தையுடனும் குடும்பத்துடனும் நதியில் படகு

# அமெரிக்காவை உலுக்கிய 'செஸனா' விமான அனர்த்தம்

விட்டு உல்லாசம் காண்பது அவர்களது வழமை.

அமேசன் நதி போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு வாய்ப்பானதும் பிரபல்யமானதும் ஆகும். அதனூடு படகுகளிலும் போதைப்பொருள்கள் பெருமளவில் கொக்கா இலைகளாகக் கடத்தப்படுவது உண்டு. நதியில் காணப்படும் பிரணாஸ் இன மீன்கள் ஆற்றில் விழுபவர்களை அப்பி விடுவதில் ஆபத்தானவை.

கடந்த மாதம் தனது மகளுக்கு, வீட்டுக்கு வந்த புதிய செல்வத்திற்கு பெரு நாட்டிற்கான விசா ஒன்றைப் பெறும் நோக்குடன் Iquitos நகரிலிருந்து Lebcia என்ற எல்லைப் புற நகரத்திற்கு அந்தக் குடும்பம் ஒரு சிறிய ரக 'செஸனா 185' (Cessna 185) விமானம் ஒன்றில் பயணமானது. அந்த உல்லாசப் பயணத்தில் சென்று சேர வேண்டிய இடத்தை அடைந்து தமது அலுவல்களை முடித்துக் கொண்டு மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

3 மணி நேர விமானப் பயணம் மிகவும் உல்லாசமாக இருந்தது. விமானி ஆசனத்தில் கெவின் டொனால்ட்ஸன் (Kevin Donaldson) என்ற விமானி துணை விமானி ஆசனத்தில் இருந்த Jim சொல்கின்ற பாதை வழியே விமானத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். அமேசன் நதிக் கரையோரம் தான் திரிந்த கிராமங்களை நாலாயிரம் அடி உயரத்தில் இருந்து தனது குடும்பத்தினருக்குக் காட்டி ரசிப்பதே அவனது நோக்கமாக இருந்தது. நதியின் இரு மருங்கும் பச்சைப் பசேலெனச் செழித்த பிரதேசங்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தன. அவனது மடியில் 7 மாத பெண் குழந்தை செல்லம் பொழிந்து விளையாடிக் கொண்டிருந்தது. பின்னே உள்ள இரண்டு ஆசனங்களில் ஒன்றில் அவனது மனைவி றொனியும் இன்னொன்றில் புதல்வன் கோறியும் அமர்ந்திருந்தனர். நதியின் காட்சி கண்ணைப் பறித்துக் கொண்டிருந்தது.

அவ்வேளை இவர்களைத் தொடர்ந்து வந்த விமானப் படை விமானம் ஒன்று வட்டமிட்டு இவர்களுக்கு மேலாகவும் கீழாகவும் பறந்து கொண்டிருந்தது. அது தங்களையே இலக்கு வைத்து நோட்டமிடுவதை அவதானித்த ஜிம் விமானியிடம் அது பற்றி வினவினான். அந்த விமானத்தோடு தொடர்பு கொள்வதற்குத் தேவையான இராணுவ அலைவரிசை இவர்களிடம் இருக்கவில்லை. எனவே சிவில் விமான நிலையம் ஒன்றுடன் தொடர்புகொண்டு தம்மை வட்டமிடும் விமானம் பற்றிய கேள்விகளை அவர்கள் எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

கலவரம் அடைந்த ஜிம் மகளை பின்னாலிருந்த மனைவியிடம் தந்து விட்டு உஷாராகினான். அவனுக்கு தம்மை வட்டமிட்ட விமானத்தின் போக்கு சந்தேகத்தைக் கிளப்பி இருந்தது.

இவர்களை விட்டு சற்றுப் பின் வாங்கிய இராணுவ விமானம் திடீரென வேட்டுக்களைத் தீர்க்க ஆரம்

# மீளமுடியாத் துயரங்களும்...

பித்தது. ஏற்கனவே தொடர்பு கொண்ட விமான நிலையத்திடம் தாம் கொல்லப்படுவதாக இவர்கள் கூச்சல் போட்டிருந்தனர். முதலாவது வேட்டு துளைத்த இடம் விமானிக்கே தெரியவில்லை.

இன்னொரு வேட்டு றொனியை முதுகில் துளைத்து குழந்தையின் தலையைத் துளைத்து விட்டது. விமானத்தில் இருந்து புகை மூட்டம் கிளம்ப ஆரம்பித்தது. வேறு பல வேட்டுக்கள் விமானத்தின் பல்வேறு பகுதிகளையும் பதம்பார்த்தன. உடனடியாக ஜிம் தனது துணை விமானி ஆசனத்தில் இருந்து துள்ளி எழுந்து தீ அணைப்புக் கருவிகளை இயங்க வைத்தான். அதற்கிடையில் விமானம் நிலைகுலையத் தொடங்கியது. விமானத்தைக் கட்டுப்பாட்டில் எடுக்க விமானி முயன்ற போதுதான் தனது கால்களில் ஒன்று இயங்காததை அவன் கண்டு கொண்டான். முதலாவது வேட்டு அவனது தொடையை பதம் பார்த்து இருந்தது அப்போதுதான் தெரிய வந்தது. எனினும் வெகு பிரயத்தனப்பட்டு விமானத்தை அமேசன் நதிக்குள் தரையிறக்க அவன முயன்று கொண்டிருந்தான். கடைசியில் விமானம் ஆற்றினுள் சரிந்து வீழ்ந்தது.

வீழ்ந்ததும் அது தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. விமான எரிபொருள் தீப்பற்றிய நிலையில் ஆற்றில் மிதக்கத் தொடங்கியது. விமானி தனது காயமடைந்த காலுடன் ஆற்றில் குதித்தான். இரத்த வாடை என்றதும் பிரணாஸ மீன்களுக்குக் கொண்டாட்டம் என்ற அச்சம் அவனிடம் பரவியது. விமானத்தின் மறு பக்கத்தால் குதித்த 6 வயதுச் சிறுவன் கோரி நீந்தி வந்து மேலே மிதந்தான். தனது மனைவியினதும் மகளினதும் உயிரற்ற முகத்தை அவன கண்டு கலங்கிவிடக்கூடாது என்பதற்காக அவற்றை குப்புற மிதக்க விட ஜிம் முயன்று கொண்டிருந்தான். அவர்களை தாழ விட வேண்டாம் என்று கோறி கதறினான். அவ்விடத்தில் உண்மையைச் சொல்லாமல் இருக்க ஜிம்மினால் இயலவில்லை.

காயங்களோடும் இழப்புக்களோடும் அவர்கள் நடுக்காட்டில் விடப்பட்டனர். அவர்களைத் துரத்தி வந்து சுட்ட விமானமோ இரண்டொரு தடவைகள் தாழப் பறந்து விட்டு திருப்தியுடன் மறைந்து விட்டது. பிரார்த்தனை செய்வதைத் தவிர உடனடியாக வேறெந்த வழியும் அவர்களுக்கு இருக்கவில்லை. அவ்வழியே ஆற்றில் வந்த படகு ஒன்று இவர்களை மீட்டு அருகில் உள்ள கிராமம் ஒன்றில் சேர்த்தது. தனது மனைவியினதும் மகளினதும் இறுதிச் சடங்கில் தம்மீது சந்தேகம் கொண்டு தவறான தகவலின் பெயரில் தாக்குதல் நடத்திய விமானியை மன்னிப்பதாக ஆழ்ந்த சோகத்துடன் ஜிம் தெரிவித்தான். எனினும் இத்தாக்குதல அமெரிக்காவை உலுக்கி இருக்கின்றது.

அடிக்கடி போதைப் பொருள் கடத்தல்கள் விமானம் மூலம் இடம் பெறுதலே இத்தாக்குதலுக்குக் காரணம் ஆகின்றது. அதுவும் குறிப்பிட்ட விமானம் அத்தகைய கடத்தலில் ஈடுபட்டிருப்பதாக தவறான தகவல் இராணுவ மையத்திற்குக் கிடைத்திருக்கின்றது. இத்தகைய தவறான தாக்குதல்கள் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் பெரும்புள்ளிகளுக்கு சாதகமாகவே அமையும்.

விமானம் ஒன்றை அடையாளம கண்டாலும் தாக்குவதற்குச் சற்றுச் சிந்திக்க வேண்டிய ஓர் இக்கட்டை இந்த நிலைமை உருவாக்கி இருக்கின்றது. இத்தகைய கெடுபிடிகளில் அப்பாவிகள் பாதிக்கப்படுவது இதுதான் முதல் தடவை என்றில்லை. ஏற்கனவே நூற்றுக்கணக்கான அப்பாவிகள் பல்வேறு சம்பவங்களில் பல்வேறு விதமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ★



மனைவி, குழந்தைகளுடன் ஜிம் பவர்ஸ்

# அன்பு வடிவாய் அமைந்த இறைவனை அன்பு வழியால் அடைந்த கண்ணப்பர்

பெரிய புராணத்தில் வரும் கண்ணப்ப நாயனார் புராணம் அன்பும், பக்தியும் பின்னிப்பிணைந்த சரிதமாகும். கண்ணப்ப நாயனாரின் முன்னைய திருநாமம் திண்ணனார். வேடுவர் தலைவரான திண்ணனார் வானத்தை எட்டும் திருக்காளத்தி மலையில் எழுந்தருளியுள்ள தளிர் போன்ற குடுமித் தேவராகிய சிவலிங்கத் திருமேனியைக் கண்டார். கண்டதும் பெருமகிழ்வு கொண்டு, ஆர்வமுற்று, அன்பு மேலீட்டால் தன்னை மறந்து, தன்னை இழந்து அச்சிவலிங்கத் திருமேனிமேல் அதிக ஆசையுற்று ஓடிப்போய் இரு கைகளாலும் கட்டி அணைத்துக் கொண்டார். மிக நீண்ட நேரம் இவ்வாறு நின்ற நிலையில் திண்ணனாரின் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தது. அடியேனாகிய எனக்கு மிக அரிய இவர் கிடைத்துவிட்டாரே! என்று அதிசயித்தார். எம் பெருமானே! இந்தக் கொடிய காட்டிலே உமக்குத் துணையாய் எவரும் இல்லையே! நீர் இங்கே தன்னந்தனியனாய் வீற்றிருக்கின்றீரே! பாவியாகிய நான் இந்தக் காட்சியைக் காண்பதோ!

இந்த நிலையில் திண்ணனாரின் கையிலிருந்த வில் கீழே நழுவி விழுந்ததை அவர் உணரவில்லை. எம் பெருமானே! உம் மீது நீர் ஊற்றி பூவும் பச்சிலைகளும் சூட்டி இந்த நல்ல காரியத்தைச் செய்தவர் யார்? என்று திண்ணனார் சிந்திக்கலானார். திண்ணனாருடன் கூட வந்த நாணன்; இவ்வாறு செய்ததோடு மந்திர உச்சாடனமும், அமுதும் படைத்தவர் சிவகோசரியார் எனும் முனிவர் ஆவாரென்று கூறினான்.

திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் குடுமித் தேவராகிய எம்பெருமானுக்குப் படைக்க இறைச்சி இடுவாருமில்லை. இவரை எவ்வாறு பிரிந்து நான் சென்று அமுது ஆக்கி வருவது என்று சிந்திக்கலானார் திண்ணனார். ஆகவே வேட்டையாடி இறைச்சி கொண்டுவரத்தான் வேண்டும் என்று நினைந்து வெளிக்கிடுவார். பிரிய முடியாமல் திரும்பி வருவார். சிவலிங்கத் திருமேனியைக் கட்டித் தழுவுவார். கன்றை ஈன்ற கன்னிப் பசுவைப் போல் துடித்தார். 'இறைவா நீர் தனித்திருக்கையில் நான் எவ்வாறு சென்று வருவது? உமக்கு பசி வந்து விடுமல்லவோ?

## ஞானக்கதிர்

ஒருவாறு துணிந்து தேவாதி தேவனை இரு கைகளாலும் தொழுது திண்ணனார் நாணன் பின் தொடர திருக்காளத்தி மலையினின்றும் இறங்கி திருமுகரி ஆற்றின் அக்கரையில் ஏறி மலர்கள் நிறைந்த சோலையிற் புக்கார். பன்றி இறைச்சியை தீயில் இட்டு வாட்டி மிகவும் உரிமையான தசைப் பகுதிகளை வாயில் இட்டு உருசி பார்த்து, இனியவற்றை தம் பசி மறந்து தேக்கிலை கல்லைத் தைத்து குடுமித் தேவருக்காக அமுதாக்கி ஒரு கையில் கல்லையை ஏந்தியும், இறைவனுக்குத் திருமஞ்சன நீராட்டத் தமது திருவாயில் குளிர்ந்த திருமுகலி ஆற்று நீரைத் தேக்கியும், புதுமலர் கொய்து தலைமேல் வைத்தும், மற்றக் கையில் அம்பையும் கொண்டு, இனித் தாமதித்தால், இறைவனுக்குப் பசிப்பிணி உற்றுவிடும் என்று எண்ணி விரைவாகக் குடுமித் தேவர் வீற்றிருக்கும் திருமலைக்குச் சென்றார் திண்ணனார்.

அங்கே தான்தோன்றி ஈஸ்வரரின் திருமேனியில் சாத்தியிருந்த வாடிய மலர்களை செருப்பு அணிந்த பாதங்களால் மாற்றி, புனித வாயில் இருந்த நீரால் நீராட்டி, தன் தலைமேல் சுமந்து வந்த நறுமலர்களை தலையால் தொழுது இட்டு, அமுது செய்து அருளும் என்று தான் கொண்டு வந்த ஊனமுதை ஊட்டினார். இரவும் வந்தது. திண்ணனார் காட்டு விலங்குகளினின்றும் இறைவனைக் காக்க, இரவு முழுவதும் வில்லேந்தி நின்றார். பெருந்தவ முனிவர்களும், தேவர்களும் காண முடியாத சிவ பரம்பொருளை, அளவிலாத அன்பினாலே கண் இமையாது பார்த்த வண்ணம் இருள அகலும் வரை காவலில் இருந்தார். பொழுது புலர்ந்ததும் குடுமித் தேவரைத் தொழுது, அப்பெருமானுக்கு ஊனமுதம் தேட திண்ணனார் செல்லவும் அந்த மலையில் மருந்தாகிய காளத்திநாதரை சிவாகம விதிப்படி வழிபட சிவகோசரியாராகிய முனிவரும் வந்தார்.

காளத்திநாதரை நண்ணியதும் வெந்த இறைச்சியையும், எலும்பையும் சந்நிதானத்தில் கண்ட முனிவர் எட்டி மிதித்து ஓடி, தேவதேவீசனே! அபச்சாரம்! அபச்சாரம்! யார் இதைச் செய்தனரோ? என்று பதறி, பூசனை பிந்திவிடுமே என்று எண்ணி ஊனையும், எலும்பையும், கல்லையையும் நீக்கி, திருவலகிட்டு மீண்டும் திருமுகலியாற்றில் மூழ்கி, புனிதராகிய சிவகோசரியார், சிவாகம முறை நெறியாவும் செய்து, பூசனை புரிந்து, தேவாதி தேவனின் திருவடிகளை வணங்கிய சிவகோசரியார் தாம் தவம் செய்யும் தபோவனம் சென்று அடைந்தார்.

பொ.சிவப்பிரகாசம்
(கொழும்புத்துறை மேற்கு)

காடு புகுந்த திண்ணனார் தாம் வேட்டையாடிய மான், மரைகளின் ஊனைத் தீயில் மீண்டும் வதக்கி, கல்லையில் இட்டு, நல்ல கொம்புத் தேனும் கலந்து அமுதாக்கி, அந்த இனிய அமுதை திண்ணனார் தமது திருவாயில் இட்டு உரிசை பார்த்து, முன்னர் போல, திருப்பள்ளித் தாமங்களும், குளிர்ந்த நீரையுங் கொண்டு திருக்காளத்தி மலை ஏறி குடுமித் தேவரின் நின்மாலியங்களை முன்னர் போல நீக்கி இறைவா இந்த ஊன் அமுதை நான் உரிசை பார்த்தேன் தேனுங்கலந்துளது, நன்றாகத் தித்திக்கும் எனக் கூறித் தமது வழி பூசனைகளைச் செய்து, எழுந்து வந்த அன்பினாலே காளத்தி அப்பரை இரவு முழுதும் உறங்காது காவல் புரிந்து, பொழுது புலர்ந்ததும் ஊனது தேடி கானகம் செல்வார்.

பெரிய முனிவராகிய சிவகோசரியார் வழமையான சிவபூசையின் நிமித்தம் வரும் போது வன வேந்தர் பூசையால் சோர்வுற்று, அவை நீக்கி, திருவலகிட்டு சிவாகம விதிப்படி பூசை செய்து வரலானார். இ்து இவ்வண்ணமிருக்க திண்ணனாரின் தந்தையாரான நாகன் திண்ணனாரின் சிவசிந்தனையை மாற்றமுடியாது எனக் கண்டு ஏமாற்றத்துடன் அகன்றார். அன்றிரவு சிவகோசரியாரின் கனவில் தோன்றிய சடாபாரத்துடன் நீறணிந்த வேதியரான சிவபெருமான் 'நீ திண்ணனாரை வேட்டையாடி கொலை செய்யும் வேடன் என்று கருதாதே, அவை அறத்தின் செயலே' நான் சொல்வதைக் கேள்' என்றார். திண்ணன் அன்பே மயமானவன், நம்மை அறிந்தவன். அவனுடைய செயல் நமக்கினியவை என அறிநீ.

மாமுனிவர் கனவு நீங்கி பொழுது புலர்ந்ததும், பொன்முகலி ஆற்றில் மூழ்கி தமது சிவபூசைகளை நிறைவு செய்து பரம்பொருளின் கூற்றுப்படி, பின்புறமாக மறைந்திருந்தார். ஆறாம் நாள் புலர்காலை வரை கண் துயிலாது காவல் புரிந்த திண்ணனார் வேட்டை ஆடி திருக்காளத்தி மலை ஏறி, இறைவனை வந்தணையும் போது சடுதியாக இறைவனின் திரு நயனம் ஒன்றிலிருந்து உதிரம் வடிவதைக் கண்ணுற்றதும், மயங்கினார். அப்போது திருவாயிற் கொண்ட திருமஞ்சன நீர் சிந்தியது, கையினின்றும் ஊனமுதம் வில்லுடன் சிதறி வீழ்ந்தது. குடுமியில் இருந்து வந்த திருப்பள்ளித் தாமம் அலையவும் நிலத்தில் வீழ்ந்தார். பின் ஒருவாறு எழுந்து இறைவனின் திருக்கண்களில் நின்றும் வடிந்த உதிரத்தைத் துடைத்தார். உதிரம் நிற்கவில்லை. செயலிழந்த திண்ணனார், இந்த இழி செயலை யார் செய்து இருப்பர்? என்று வில்லமபுடன் தேடலானார். மீண்டும் வந்து திருக்காளத்தி அப்பரின் நிறைமலர்ப் பாதங்களைப் பற்றி கண்ணீர் உகுத்தார். இந்தப் புண்ணை மாற்ற பச்சிலை மூலிகைகளைத் தேடி மலைப்புறம் சென்றார். தாம் கொண்டு வந்த பச்சிலைகளைப் பிழிந்து இறைவனு

(8ஆம் பக்கம் பார்க்க)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




கோப்பாய் வடக்கைச் சேர்ந்த
**சித்தாந்தபானு சுப்பிரமணியக்குருக்களின் பூட்டியும்**
**சுரேந்திரக்குருக்கள் - நாகலக்ஷுமி**
**தம்பதிகளின் செல்வப் புதல்வியும் ஆகிய**

## செல்வி அபர்ணா

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (18-05-2001) வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அபர்ணாவை அம்மா, அப்பா, அண்ணா, பூட்டன், நீர்வேலி தாத்தா பாட்டி, பெரியபாட்டி, கோப்பாய் தாத்தா பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, நெல்லியடி அத்தை, மாமா, மச்சாள்மார், மச்சான்மார், நீர்வேலி மாமா, மாமி, கனடா பெரியப்பா, பெரியம்மா, அக்காமார் மற்றும் உறவினர்கள் இறை அருள் பெற்று ஆரோக்கியத்தோடு தீர்க்காயுசுடன் சிறப்புற்று வாழ ஆசீர்வதிக்கின்றனர்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (87859)

தாத்தா ஆ.சந்திரசேகரக் குருக்கள்,
பாட்டி ச.சுப்புலட்சுமி

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில் 17 - 05 - 1932

விண்ணுலகில் 18 - 04 - 2001

## அமரர் சிதம்பரன் குணத்திலிங்கம்

*எம் குடும்பத்தின் குலவிளக்கே!*
*எம் வாழ்வின் ஒளி விளக்கே!*
*எங்கே நீங்கள் சென்றீரோ?*
*இங்கே எம் எண்ணங்கள்*
*என்றும் விட்டு அகலாது!*

முகவரி:
*விவேகானந்தா ச.ச.நி,*
*கெருடாவில் தெற்கு*
*தொண்டமானாறு* (87889)

என்றும் மறவா நினைவுடன்....
திருமதி
பச்சைமுத்து குணத்திலிங்கம்
குடும்பத்தினர்.

## பல்கலை. அனுமதி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து கடந்த ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றுச்சென்ற மாணவர்கள் மேற்படி கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வணிக ஜோதி 19ஆவது மலர் வெளியீட்டு விழாவின் போது இடம் பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக அனுமதி பெற்றுச் சென்ற மாணவர்களுக்கான விருதுகளை யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் கே.தேவராஜாவும் -

வணிக அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களை யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராஜாவும் வழங்கினார்கள். (க-103)

## பயிற்சி விமானம் விபத்தில் சிக்கிப் பெரும் சேதம்

தனியார் விமான சேவை நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான விமானம் ஒன்று களுத்துறைப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை விபத்துக்குள்ளானது. இந்த விமானம் விமானிகளுக்குப் பயிற்சியளிக்கும் விமானம எனத் தெரிவிக்கப்பட்டது.

இயந்திரக் கோளாறு ஏற்பட்டதை அடுத்து களுத்துறைப் பிரதேசத்திலுள்ள 'கட்டுக்குறுத்த' விமான ஓடுதளத்தில் தரையிறக்க முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துக் காரணமாக விமானம் முழுமையாக சேதமடைந்துள்ளது என்றும் அதிலிருந்த இரண்டு விமானிகளும் பலத்த காயமடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறு காயமடைந்தவர்களில் ஒருவர் விமானப் பயிற்றுவிப்பாளர்.

## அன்பு வடிவாய்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைய கண்களில் வார்த்தும் குருதி நீர் நிற்கவில்லை.

இறுதியில் 'ஊனுக்கு ஊன்' என்ற அமுதவாக்கை நினைந்து, பேருவகையுடன், இறைவன் திருமுன்பு இருந்து, தனது வலக்கண்ணை கூரிய அம்பால் இடர்ந்து அப்ப, குருதி நின்றது. இந்த அகமகிழ்வால் துள்ளிக் குதித்தார், ஆரவாரம் செய்தார். கூத்தும் ஆடி, புன்சிரிப்பும் உற்றார். சிவ பெருமான் கண்ணப்பருடைய பேரன்பை சிவகோசரியாருக்குக் காட்ட இடது கண்ணாலும் செங்குருதி பாய்ந்தது. மற்றக் கண்ணிலும் குருதி கண்ட போது மாற்று மருந்து உண்டு. நான் அஞ்சப்போவதில்லை. எனது எஞ்சிய மற்றக் கண்ணும் இருக்கிறதே! ஆனால் எனது மற்றக் கண்ணை இடக்கும் போது அதை எம் பெருமானின் கண்ணில் அப்ப எனக்குப் பார்வை வேண்டுமே! எனவே திண்ணனார் தனது இடக் காலினை எடுத்து குடுமித் தேவரின் குருதி வழியும் கண்ணில் ஊன்றிக் கொண்டு மிக விருப்புடன் அம்பைக் கண்ணப்பர் தனது கண்ணில் ஊன்றவே திருக்காளத்தி அப்பரது திருக்கை தோன்றி கண்ணப்பரின் கையைத் தடுத்து 'கண்ணப்ப நில்' என்றது. காளத்தியப்பரின் திருவாக்கு இந்தத் திருக்காட்சியை ஞானமுனிவராகிய சிவகோசரியார் கண்டார். ★

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 10 - 02 - 1932

விண்ணில் 18 - 04 - 2001

## திருமதி குமரேசு செல்லம்மா

**அன்பின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய்**
**பாசத்தின் இலக்கணமாய் இருந்து**
**எம்மையெல்லாம் வழிநடத்திய அம்மாவே!**
**உங்கள் நினைவு உயிருள்ள மட்டும்**
**எம் நெஞ்சத்தை விட்டு நீங்காது!**


இன்று (18-05-2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்போதைய முகவரி:-*
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

*நிரந்தர முகவரி:-*
சாவகச்சேரி வடக்கு,
மடத்தடி, சாவகச்சேரி. (87890)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்,
பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

# 31ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 07 - 03 - 1920

உதிர்வு 18 - 04 - 2001

## அமரர் நாகலிங்கம் பொன்னம்பலம்

(முன்னாள் பத்திரிகை முகவர் லேக் ஹவுஸ்)

*திங்கள் ஒன்று சென்றதையா!*
*நீங்கள் தீயிலே சங்கமமாகி,*
*எந்தை எந்நாளும் நீர் எம்முடனே*
*முந்தி நாமும் வாழ்ந்த வாழ்வு,*
*விந்தையாம் இவ்வுலகில் இனியேது?*
*தந்தை உங்கள் பிரிவை எண்ணிக்*
*கண்கள் குளமாகிக் கனக்குதே இதயம்,*
*உங்கள் பாதம் பற்றியே நன்று நாம்*
*ஏற்றியும் போற்றியும் துதிக்கின்றோமே!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கேணிக்கரை,*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (87853)

*பிரிவால் வாடும்:*
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24 - 09 - 1924

விண்ணில் 01 - 05 - 2000

## அமரர் குட்டியர் தம்பிராஜா

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)
திதி:- அபரபக்க ஏகாதசி

**எம்மை மண்ணில் நல்ல வண்ணம் வாழவைத்து**
**வானுறைந்த தெய்வத்துக்கு எம் அஞ்சலிகள்!**

*"தேவமகால்"*
*நெல்லியடி வடக்கு* (87862)


- குடும்பத்தினர்.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசி மாதம் 6ஆம் நாள் (20.05.2001) ஞாயிற்றுக்கிழமை (பூ.நே.) முற்பகல் 9.57 மணி தொடக்கம் 10.57 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**லெட்சுமணன் (சிவா)**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பிறேமா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்புபசாரம் - மணமகன் இல்லத்தில் 21-05-2001 திங்கட்கிழமை**
**பிற்பகல் 3.00 மணி முதல் நடைபெறும்**

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

திரு.திருமதி
லெ.வேணுகோபால் ஆச்சாரி,
குடும்பத்தினர்
*306, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(87858)

திரு.செ.செல்லத்துரை
திரு.திருமதி சி.ஆனந்தராசா
குடும்பத்தினர்
*மூத்த விநாயகர் கோயிலடி,*
*காவில் கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

(இரு வீட்டார் அழைப்பு)



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓராண்டுப் பூர்த்தி விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அச்சமயம் எடுக்கப்பட்ட படங்கள். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரிகள் பிரிவின் பிரதம ஆணையாளர் நிஹால் ஹேரத், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன், யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், கல்விக் கல்லூரிகள் பிரிவின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி புவனா இராமகிருஷ்ணா ஆகியோர் உரையாற்றுவதையும் -

நிகழ்வில் கலந்துகொண்ட நல்லைக் குருமுதல்வர், தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் மற்றும் பிரதம ஆணையாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் - படங்களில் காணலாம். *(படம்: றோய் மதிவதனன்)*

சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை:

## ஒரே நாளில் 21 பேருக்கு அபராதம்; 1 லட்சத்து 37 ஆயிரம் ரூபா அறவீடு

யாழ்ப்பாணம்,மே18

சட்டவிரோதமாக சாராயம் மற்றும் கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடு பட்ட 21 பேருக்கு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராசா ஒரு லட் சத்து 37 ஆயிரம் ரூபா தண்டப்பண மாக விதித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். நீதிமன்றில் நடைபெற்ற வழக்குகளி லேயே மேற்படி தண்டப்பணம் அற விடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் சட்டவிரோதமாக மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான நடவடிக்கைகளை கட் டுப்படுத்துவதற்கு புதிதாக அமைப் புக்கள் உருவாக்கப்பட்டுவரும் நேரத் தில் -

இவ்வாறு சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய் வோர் தொகையும் அதிகரித்து வரு வதாக நீதிமன்ற வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

கசிப்பு உற்பத்தி, விற்பனையை குடாநாட்டில் முழுமையாகக் கட்டுப் படுத்தும் வரை சமூகச் சீர்கேடுக ளைக் கட்டுப்படுத்த முடியாது என் றும் தெரிவிக்கப்பட்டது. (க-6)



தந்தை செல்வா நூற்றாண்டு நினைவை ஒட்டி செல்வா நூற்றாண்டு விழாச் சபை நடத்திய கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் இடம் பெற்ற மாணிக்கம் வெற்றிவேல் -

அகில இலங்கை மட்டத்தில் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை -

மாவட்ட மட்ட கட்டுரைப்போட்டியில் முதலிடம் பெற்ற எஸ்.சகாயசீலன் ஆகியோருக்கு தந்தை செல்வா அறங்காவல் குழுத் தலைவரும் தென்னிந் தியத் திருச்சபைப் பேராயருமான அதிவண. எஸ்.ஜெபநேசன் அடிகள் பதக் கம் அணிவித்து சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதை படங்களில் காண லாம். *(படம்:வடமராட்சி பிரதேச செய்தியாளர்)*

அரசுக்கு எதிராகக் கொண்டுவரவுள்ள

# நம்பிக்கையில்லாப் பிரேரணை முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை

### ரவி கருணாநாயக்க எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,மே18

சில கட்சிகள் எமக்கு ஆதர வளிப்பது தொடர்பாக உறுதியற்ற நிலையில் செயற்படுகின்றபோதும் அரசுக்கு எதிராக நம்பிக்கையில் லாப் பிரேரணையைக் கொண்டு வரும் எமது முடிவில் எவ்வித மாற் றமும் இல்லை.

- இவ்வாறு ஐ.தே.க. மத்திய குழு உறுப்பினரும் எம்.பியுமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான மற்றும் பிர தம நீதியரசருக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவரும் ஐ.தே.க.வின் முடி வில் மாற்றம் வரலாம் - என்றும் உட னடியாக நம்பிக்கையில்லாப் பிரே ரணை கொண்டுவரப்படமாட்டாது என்றும் கூறப்படும் கருத்துக்கள் குறித்தே ரவி கருணாநாயக்க மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு ஐ.தே.கவுக்குள்ளேயே சிலர் ஆதர வளிப்பது நிச்சயமில்லை என்றும் கட்சித் தகவல்கள் சில தெரிவிக் கின்றன.

இந்தப் பிரேரணை தோல்வி அடைந்தால் அதற்குத் தாம் காரண மல்ல என்று ஜே.வி.பியும் கூறியுள் ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியி னர் தாம் இறுதி நேரத்திலேயே தீர் மானம் எடுப்பதாகக் கூறியுள்ளனர். ரெலோ நிபந்தனைகளை விதித் துள்ளது. இப்படியான சூழ்நிலை யில் ஐ.தே.க. கொண்டுவரப்போகும் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறை வேறுவது சாத்தியப்படாது என்று கூறப்படுவது தொடர்பாக ஐ.தே.க வின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு எம்.பி. இது பற்றி தம்மால் எதையும் கூற முடியாதென்றும் அரசியல் குழுவே இறுதித்தீர்மானம் எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ஏ)

### விழிப்புலனற்றோர் சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே18

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தின்(கைதடி) வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இலக்கம் 228, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் கேட்டிருக்கிறார். (ஐ)

### மாதர் சங்கம் அங்குரார்ப்பணம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாவற்கட்டு கிராம சேவையாளர் பிரிவில் மாதர் முன் னேற்ற சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

கிராம சேவையாளர் என்.தன பாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத் தர் எஸ்.ஸ்ரீபதி, சமுர்த்தி அபிவி ருத்தி உத்தியோகத்தர் கே.ஆனந்த வேல் மற்றும் திருமதி சி.ரேவதி உட் பட பலர் கலந்துகொண்டனர். (க-152)

### சங்குவேலியில் 13 குடும்பங்களுக்கு வீடுகட்ட நிதி

வலிகாமம் பிரதேசசெயலர் பிரி வில் உள்ள சங்குவேலி கிராமத் தில் வாழும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 13 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு போரூட் நிறு வனம் முன்வந்துள்ளது.

மேற்படி குடும்பங்கள் ஒவ்வொன் றுக்கும் வீடுகள் அமைப்பதற்கென தலா 30ஆயிரம் ரூபாவை போரூட் நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் சங்குவேலி ஸ்ரீ அம்பாள் முன்பள்ளிக்கு கட்டடம் அமைக் கவும் 60ஆயிரம் ரூபாவை போரூட் நிறுவனம் ஒதுக்கி உள்ளது.(க-152)

## தென்மராட்சிப் பகுதி மக்கள் வீடுகளைப் பார்வையிட ஏற்பாடு

### ஈ.பி.டி.பி. தரப்பில் முயற்சி

யாழ்ப்பாணம்,மே18

யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வாழும் தென்மராட் சிப் பகுதி மக்கள் ஒருவார காலப் பகுதிக்குள் தங்கள் வீடுகளைப் பார் வையிட சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார்கள் என்று ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு ஒன றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் விரைவில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப நட வடிக்கை எடுக்குமாறு வடக்கின் அபி விருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவ கார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருவதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படைத்தரப்பினருடன் பேச்சு நடத் தியதையடுத்து விரைவில் தென்ம ராட்சி மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என் றும் முதற்கட்டமாக குழுக்களாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் வீடு களைப் பார்வையிட அழைத்துச் செல் லப்படுவார்கள் என்றும் இத்திட்டமே விரைவான மீளக்குடியமர்வை மேற் கொள்ள, வேண்டிய இடங்களை அடையாளங் கண்டு, அங்கு தேவை யான நடவடிக்கைகளை எடுக்க முடி யும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தென்மராட்சிப் பகுதி களில் தமது சொந்த இடங்களை மக்கள் குழுக்களாகப் பார்வையிடச் செல்லுகின்ற போது ஈ.பி.டி.பி. பிரதி நிதிகள் இருவரும் கலந்து கொள் வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (க)

சம்மாந்துறையில் செவ்வாய் இரவு

## முஸ்லிம்கள் மீது தாக்குதல்; 6 அதிரடிப் படையினர் இடமாற்றம்

அம்பாறை,மே18

சம்மாந்துறையில் கடந்த செவ் வாய் இரவு முஸ்லிம்கள் மீது தாக் குதல் மேற்கொண்ட காரைதீவு விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர் 6 பேர் கடந்த புதன்கிழமை உடன டியாக வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காரைதீவு விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி எல்.ஆர்.கே. ஜே.அபேசிங்க புதன் மாலை சம் மாந்துறையில் நடைபெற்ற சமாதா னக் கூட்டத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

முஸ்லிம்கள் மீது விசேட அதி ரடிப் படையினரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலுக்காக தாம் மனம் வருந்துவதாகவும் அதற் காக மன்னிப்புக் கோருவதாகவும் பொறுப்பதிகாரி அபேசிங்க கூட்டத் தில் உரையாற்றும்போது கூறினார்.

செவ்வாய்க்கிழமை இரவு சம் மாந்துறை விழிணையடிச் சந்தியூடாக வந்த முஸ்லிம்கள் மீது விசேட அதி ரடிப்படையினர் தாக்குதல் நடத்தி யதால் பலர் பாதிக்கப்பட்டதுடன் இருவர் வைத்தியசாலையிலும் அனு மதிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து புதன் கிழமை சம்மாந்துறையில் பெரும் பதற்றம் நிலவியதுடன் இதற்கு ஆட் சேபனை தெரிவித்து ஹர்த்தால் ஒன்றை நடத்தும் ஏற்பாடுகளும் நடைபெற்றன.

இதேவேளை, சம்மாந்துறையில் தங்கியிருந்த திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். முகைதீன் இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, நடைபெற்ற சம்பவத்துக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்ததுடன் சம்பந்தப்பட்ட விசேட அதிரடிப் படையினர் மீது ஒழுக்காற்று நடவ டிக்கை மேற்கொள்ளுமாறும் வலியு றுத்தியிருந்தார். (க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சிவகுரு வீதி, ஏழாலை மேற்கைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை விஜயாதேவி என்பவருடைய தே.அ.அட்டை (இல. 687302109V), வி.அ.அட்டை (இல. 090602644) என்பன ஏழாலைக்கும் சுன்னாகத்திற்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஜெய துர்க்கா தொலைத் தொடர்பு நிலையம், K.K.S. வீதி, சுன்னாகத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (87875)

நல்லூர் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் எனது கைச்சங்கிலி 15.05.2001 அன்று மதியம் அலுவலகத்தில் இருந்து பலாலி வீதியூடாக உரும்பிராய் சிவன் வீதியில் உள்ள எனது வீட்டிற்குச் சென்ற வேளை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நல்லூர் பிரதேச செயலகத்தில் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (87887)

ஒலுவில் றோட், ஊர்காவற்றுறை (தீவகம்) முகவரியுடைய றொபின்சன் அமலடிலானி என்பவருடைய நேவி அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில இருந்து அல்லைப்பிட்டி செல்லும் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். (87899)

மாறாம்புலம் பிள்ளையார் கோயில அல்வாய் வடக்கு, அல்வாய், பருத்தித்துறையைச் சேர்ந்த நா.திவாகரசர்மா என்பவரின் தே.அ.அ.(இல. 762414538V), விசேட அடையாள அட்டை (0908019560), வா.ஜெயப்பிரபா என்பவரின் தே.அ.அ(இல. 798291777V), விசேட அ.அ.(இல. 0908012875) என்பன பேர்சுடன் (16-05-2001ல்) கோண்டாவிலுக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திவாகரசர்மா, கருணாகரப் பிள்ளையார் கோயில், உரும்பிராய் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (87902)

### ஓட்டோக்கள் விற்பனைக்கு

21, 200, 201, 203 தொடர் இலக்கமுடைய கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள ஓட்டோக்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: ஐ.தவகுமாரன், 23, உடுவில் வீதி, மானிப்பாய். (87753)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள "ஒலிம்பியா" தட்டச்சு இயந்திரம் மற்றும் "றோணியோ" இயந்திரம் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- V.வாசன், வைரவர் கோயில் வளவு, மயிலணி, சுன்னாகம். (87826)

கோல்ட்பிஸ் (GOLD FISH) மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஐ.அருளானந்தம் (குட்டி), 40/17 (16/16), சீனியர் லேன், யாழ்ப்பாணம். நண்பகல 12 மணிக்குப் பின் பார்வையிடலாம். (87827)

கேம்பிறிஜ் வான் விற்பனைக்கு உண்டு. மொடல் A.55 சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு:- இல. 105, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம். (87874)

புறொயிலர் குஞ்சுகள் வெள்ளிக்கிழமை (18/5), சனிக்கிழமை (19/5), ஞாயிற்றுக்கிழமை (20/5) விநியோகிக்கப்படும். விவரங்களுக்கு: S.கிருஷ்ணகுமார் (கிருஷ்ணா பாம் வளவு), மானிப்பாய்., ராமையா செட்டியார், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (87883)

### வீடு விற்பனைக்கு

காலஞ் சென்ற சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான நட்டராஜன் வீடு விற்பனைக்குண்டு. மல்லாகம் பங்களா லேனில் அதனைப் பார்வையிடலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோ.கெங்காதரன், மணியகாரன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (87728)

### குஞ்சு விற்பனைக்கு

பிறிமா, சமீரா, புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.343, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.3353, இல.609, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (87904)

### இலக்கியக் கட்டுரைகள்

ஆசிரியர்களே, மாணவர்களே, வினாவிடைகள் மூலம் கற்பதல்ல இலக்கியம. எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நவீன இலக்கிய விளக்கங்களை இலக்கியக கட்டுரைகள் நூலில் வாசித்துப் பயன் அடையுங்கள். (87894)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும், பாதிக் கோழி உட்பட தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். S.கிருஷ்ணகுமார் (கிருஷ்ணா பாம் வளவு), மானிப்பாய். (87884)

இறைச்சிக் கோழி (BROILER) விற்பனைக்குண்டு. மற்றும் மிகவும நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி (SISIL.R.80) ஒன்றும விற்பனைக்குண்டு. தொடர்பு: College Lane, Vaddukoddai. (87895)

### படிவம்

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றன. வர்த்தமானி பார்வைக்கு உண்டு. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/16689)

## மாவனல்ல சம்பவம் அரசுக்கெதிரான ஒரு சதியாம்

மாவனல்ல சம்பவங்கள் அரசுக்கெதிரான ஒரு சதியென்று இன விவகார, தேசிய நல்லிணக்க அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மத்தியில் தெரிவித்தார்.

இன, மதப் பிரிவுகளிடையே தகராறுகள் வலுவடையுமாயின் நாடு எங்கே போய்முடியும் என்பது எவராலும் கூறமுடியாததாய் உள்ளது. ஆனால், நாட்டின் எதிர்காலம் சகல இனங்களினதும் ஐக்கியத்திலும் சமாதானத்திலுமே தங்கியுள்ளது என்று அமைச்சர் அங்கு உரையாற்றினார்.

அமைச்சர் மாவனல்லையில் 15 சமாதானக் குழுக்களையும் டெடிகமவில் சமாதானக் குழுக்களையும் அமைத்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் அமைச்சர்கள் பலரும் இக்கூட்டத்துக்கு சமுகம் அளித்திருந்தனர். (க)

## தற்கொலைப்படை அணியைத் தேடி வலைவிரிப்பு

கொழும்பில் ஒன்பது தற்கொலைக் குண்டுதாரிகளையும், அவர்களின் உயர் தொழில்நுட்பத் தொடர்பாடல் நிலையம் ஒன்றையும் தேடி நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினர் வலைவிரித்திருந்தனர்.

வடபகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் ஒருவருக்கும் ஒன்பதுபேர் கொண்ட தீவிரவாதிகளின் அணியொன்றுக்குமிடையே செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தொலைத்தொடர்பை இடைமறித்துக் கேட்டதிலிருந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தற்கொலைப் படையினர் அதிமுக்கிய நபர்களையோ அல்லது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையோ தாக்குவதற்கு வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (க)

## முத்திரைகள் வந்து சேர்ந்தன

யாழ்.மாவட்ட தபாலகங்களுக்கு முத்திரைகள் நேற்று எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடாநாட்டில் கடந்த ஒருமாத காலமாக நிலவிவந்த முத்திரைத் தட்டுப்பாடு இனி நீங்கிவிடும் என்றும் தேவையான அளவு முத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குடாநாட்டில் நீண்டகாலமாக பெறுமதிவாய்ந்த முத்திரைகளுக்குத் தட்டுபாடு நிலவிவருகின்ற போதிலும் கொழும்பில் இருந்து பெறுமதிவாய்ந்த முத்திரைகள் அனுப்பப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (க-6)

## முக்கிய அறிவித்தல்

வடக்கு - கிழக்கு எழுதுநர் மற்றும் கணக்குப் பதிவுநர் நியமனத்தில் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நியமனம் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்பட இருப்பதால் எமது அமைப்பில் பதிவு செய்து இதுவரை எந்த வேலையும்அற்று இருப்பவர்களும், பதிவினை மேற்கொள்ளாது வேலையற்றிருப்பவர்களும் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**காலம்:-** நாளை (19-05-2001) சனிக்கிழமை காலை 9மணி
**இடம்:-** யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

சி.வசந்தகுமார்,
தலைவர்,
பாதிக்கப்பட்டோர் அமைப்ப.

(87917)

## பாதுகாவலனைப் பாராட்டி வாழ்த்துகிறேன்

125 ஆவது ஆண்டு நிறைவில் பயணிக்கும் பாதுகாவலனுக்கு "திறமையான வடிவமைப்புக் கொண்ட பத்திரிகைக்கான தேசிய விருது" கிடைத்ததையிட்டு
பாதுகாவலன் ஆசிரியர்
**அருட் திரு. ரூபன் மரியாம்பிள்ளை**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.
காவலன் பத்திரிகைக் குடும்பத்தாரோடு எனது மகிழ்வினைப் பகிர்ந்து கொள்கிறேன்.
பணி தொடர எனது நல் வாழ்த்துக்கள்.

\- எஸ்.யேசுதாஸ்
பாதுகாவலன் நிருபர், கொழும்புத்துறை.

(87914)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
திரு. வீ. இராசையா
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி மீனாட்சி வீரகத்தி**
அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை,
*மானிப்பாய்.*

(87915)

**BEACON**
(யாழ்நகர்)
நாடகமும் அரங்கியலும்
**A/L**
2001, 2002, 2003
ஆகிய பிரிவுகளுக்கு
வகுப்புகள் நடைபெறுகின்றன.
காலம்:- சனி, ஞாயிறு.
ஆசிரியர்:- T.J. சுதன்
(87907)

## கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட இராணுவ வைத்திய நிபுணர்!

கொழும்பு,மே18

இராணுவத்தின் மருத்துவப் படைப்பிரிவில் சேருமாறு தினமும் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி சேவைகளிலும் விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கும் அதே சமயம் கொழும்பிலுள்ள இராணுவ மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்த முறிவு நெரிவு வைத்திய நிபுணர் கேணல் சிறிவர்த்தனா காரணம் எதுவும் தெரிவிக்கப்படாது ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளார்.

இந்த வைத்திய நிபுணர் ஓய்வு பெறும் வயதை எட்ட இன்னும் 9 ஆண்டுகள் உள்ளன. மேலும் இராணுவ மருத்துவமனையில் முறிவு நெரிவு வைத்திய நிபுணர்களுக்கான வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாத நிலையில் உள்ளன.

அண்மையில் இடம்பெற்ற 'அக்கினிசுவாலை' இராணுவ நடவடிக்கையில் கடுமையான பாதிப்புக்களுக்குள்ளான சுமார் 200க்கும் மேற்பட்ட படை வீரர்களுக்கு இந்த வைத்திய நிபுணர் சிகிச்சை அளித்துவந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வாசகர் திருமுகம்

## செட்டியார்மடம் வரைக்கும் பஸ் சேவை நடக்குமா?

கடந்த காலத்திலே பாதை 785 இற்குரிய பேருந்து காலை 7.45 க்கு செட்டியார்மடம் வந்தடையும். அதனால் அரச ஊழியர்கள், தனியார் சேவையாளர்கள், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் ஆகியோர் உரிய நேரத்தில் கடமைக்குச் செல்ல உதவியாக இருந்தது.

கடந்த சில நாள்களாக ஒருசில கடை முதலாளிகளின் நன்மை கருதி பஸ் நேரம் மாற்றப்பட்டு குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பதாகவே பேருந்து செல்வதால் 2 மைல் தூரவுள்ள பாலத்துக்கு கால் நடையாகவே செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அராலி வடக்கு மக்களும் மக்கள்தான் என்று கருதாது இந்தப் பாதையை 3-6 மணித்தியாலத்துக்கு ஒரு பேருந்தே ஓடுகிறது. அதனால் வடக்கு அராலி மக்கள் பாலத்துக்கு நடக்கவேண்டியுள்ளது. கடந்த காலத்தில் காலை வட்டுக்கோட்டை வரை ஒரு குறுகிய சேவையை விட்டார்கள். 784 இலக்க பஸ் இப்பாதையால் ஓடியது. இப்போது எந்தச் சேவையும் நடைபெறுவதில்லை.

வடக்கு அராலியில் சுமார் 2000 குடும்பங்களைச் சேர்ந்த 8000 பேர் வசிக்கின்றனர். இவர்களுக்கும் மக்கள் சேவையான பேருந்து சேவை கிடைக்க இ.போ.ச. சாலை நிர்வாகத்தினர் சிந்திப்பார்களா?

இப்போது ஓடும் 785 இலக்க பஸ் காலை 7.45க்கு செட்டியார் மடம்வர வசதி செய்வார்களா?

*அராலி.* S.R. அருமைநாயகம்

## ஸ்ரீ கணேச வித்தியாசாலைக்கு அவசரத் தேவை ~ காணி

நான் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் முதலாம் வகுப்புத் தொடக்கம் எஸ்.எஸ்.சி. வகுப்பு வரை படித்து சித்தியடைந்து, பின்னர் இந்தப் பாடசாலையிலேயே ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவன் என்ற வகையிலும், 1942ஆம் ஆண்டு தொடக்கம் இப் பாடசாலையுடன் தொடர்புடையவன் என்ற வகையிலும் இக் கடித்தை எழுதுகிறேன்.

இப் பாடசாலையை 1918ஆம் ஆண்டு சித்தன்கேணியைச் சேர்ந்த கனவான் அமரர் மா.கணகசபாபதி நான்கு பரப்புக் காணியை வழங்கி ஆரம்பித்து வைத்தார். இங்கு முதலாம் வகுப்புத் தொடக்கம் எஸ்.எஸ்.சி. வரை நடைபெற்று வந்தது. இதனால் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர். இப் பாடசாலை சித்தன்கேணிச் சந்திக்கு அருகில் இருக்கின்றபடியால் சித்தன்கேணி மக்கள் மட்டுமன்றி அயற்கிராம மக்களும் இங்கு கல்விகற்றுப் பயன்பெற்றுள்ளனர்.

தற்போது ரெலிக்கொம் உரிமை கொண்டாடும் காணியை, 1950 ஆம் ஆண்டு பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் தின விழாவில் உரையாற்றிய அமரர் ச.குமாரசாமியின் துணைவியார் அமரர் வள்ளியம்மை இப் பாடசாலைக்கு தருவதாகவும், இப் பாடசாலையை சைவப் பெண்கள் கல்லூரியாக்க தம்மாலான ஒத்துழைப்புத் தருவதாகவும் கூறியிருந்தார்.

இதன் பின் 1960இல் அரசாங்கத்தினால் பாடசாலைப் புனரமைப்பின் பிரகாரம் இந்தப் பாடசாலை வகுப்பு 5க்கு தரம் இறக்கப்பட்டது. பின் 1988ஆம் ஆண்டு திரும்பவும் ஆண்டு 8 வரை தரம் உயர்த்தப்பட்டு, 2002ஆம் ஆண்டில் தரம் ஒன்பது வைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் பாடசாலையின் நான்கு பரப்பு காணியில் எவ்வித மாற்றமும் இல்லை.

1980ஆம் ஆண்டு தொடக்கம் இந்தக் காணியை பாடசாலையுடன் இணைப்பதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் எவ்வளவோ முயற்சி எடுத்தது பயனளிக்கவில்லை. அந்தக் காலத்தில் ரெலிக்கொம் இந்தக் காணியை வாங்கி அதற்குள் ஒரு கட்டடம் கட்டியது. அது இன்று சேதமடைந்துள்ளது. பராமரிப்பவர்கள் இல்லாமல் காணி முழுவதும் பற்றைக் காடாக காணப்படுகிறது. இந்திய அமைதிப்படை மற்றும் இயக்கங்கள் இந்தக் காணியைப் பயன்படுத்தியதும் உண்டு. ஆனால் எவரும் 15 வருடங்களுக்கு மேலாக இந்தக் காணியை எட்டிக் கூடப்பார்க்கவில்லை.1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படை இந்தக கட்டடத்தையும், காணியையும் பாவித்த போது அவர்களிடம் எங்கள் பாடசாலையின் இட நெருக்கடியையும் பாடசாலையின் வகுப்பறையின் தேவைகளையும் சுட்டிக்காட்டினோம். அவர்கள் இக்காணியையும் கட்டடத்தையும் பாவிப்பதற்குத் தந்தார்கள். அன்று தொடக்கம் இன்று வரை இடையிடையே சில அத்துமீறல்கள் மத்தியிலும் காவல்துறையினரோடு தொடர்பு கொண்டு காணியைப் பாவித்துக்கொண்டிருக்கின்றோம்.

1990 ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி இதற்குப் பக்கத்திலிருந்த காணியுடன் சேர்த்து நடத்தப்பட்டது. அடுத்து இடம் பெயர்வினால் மாணவர் எண்ணிகை அதிகரித்த போது இக்காணியிலேயே தற்காலிக மண்டபம் அமைத்து 6 வகுப்புகள் நடத்தப்பட்டன.

ரெலிக்கொம் நிறுவனத்தினரின் 12.05.2001 உதயனில் குறிப்பிட்டது போல இப்பிரதேச மக்களுக்குத் தொலைத் தொடர்பு வழங்கவேண்டியது அவசியம். இதற்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அவர்கள் பொருத்தமான ஒரு காணியைத் தேடுவதே நல்லது. இப்பாடசாலையின் கல்விச் செயற்பாட்டுக்கு பாடசாலையுடன் இணைந்த காணியே தேவை. அதேசமயம் ரெலிக்கொம் நிறுவனத்தினர் சித்தன்கேணியைச் சூழ உள்ள அரச காணிகள் தனியார் காணிகளை எடுத்து விஸ்தரிக்கலாம்.

இந்தப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் அண்மையில் புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த போது அவர் இப்பாடசாலையுடன் இக்காணியை இணைத்துத் தருவேன் என்ற உறுதிமொழியை வழங்கியுள்ளார் அதை அவர் நிறைவேற்றித்தருவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

*சித்தன்கேணி.*

க.நல்லையா,
(முன்னாள் அதிபரும், பழைய மாணவர்சங்க உபதலைவரும்)

## எல்சல்வடோரில்
# 80லட்சம்வருடங்களுக்குமுந்திய மிருகங்களின் எச்சங்கள் மீட்பு

சான்சல்வடோர், மே 18

மத்திய அமெரிக்கநாடான எல்சல்வடோரில்சுமார் 80 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படும் மிருகங்களின் எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நாட்டின் வடபகுதியில் உள்ள 'ஸமரி யோட்டா' ஆற்றுப் படுக்கையில் இருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டன. 19 வகையான மிருகங்களின் எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கூறி உள்ளனர்.

கடந்த வருடம் ஸமரியோட்டா பகுதியில் வசிக்கும் விவசாயி ஒருவர் விவசாயச் செய்கைக்காகத் தனது நிலத்தைப் பண்படுத்திய போது அங்கு பல எலும்புக் கூட்டு எச்சங்களைக் கண்டார். இது தொடர்பாக அரச பகுப்பாய்வு நிறுவனத்துக்கு அவரால் அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து கடந்த ஏப்ரல் மாதம் முதல். அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதியில் ஆராய்ச்சிகளில் ஈடுபட ஆரம்பித்தனர்.

கண்டு பிடிக்கப்பட்ட எலும்பு எச்சங்களுக்குரிய மிருகங்கள் இந்த ஆற்றுக்குத் தண்ணீர் குடிப்பதற்கு வந்த சமயம் சேற்றில் புதையுண்டு இறந்திருக்கலாம் என்றும்—

அதன் பின்னர் கால மாற்றம் மற்றும் மண், பாறை, எரிமலைக் குழம்பு என்பனவற்றால் ஏற்பட்ட படிமங்களால் இவற்றின் எச்சங்கள் மூடப்பட்டு, இது நாள் வரையில் பாதுகாப்பாக இருந்திருக்கலாம் என்றும்—

ஆராய்ச்சியாளர் டானியல் அக்கியல் தெரிவித்தார். (ம)

## பயங்கரவாதச் செயல்களுக்காக
# ரியல் ஐ. ஆர். ஏ. அமைப்பையும் அமெரிக்கா தடை செய்தது

வாஷிங்ரன், மே 17

வட அயர்லாந்தில் செயற்பட்டு வரும் ஐரிஷ் குடியரசின் அதிருப்திக் குழுவான ரியல் ஐ. ஆர். ஏ அமைப்பைப் பயங்கரவாத அமைப்பு என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் ரியல் ஐ. ஆர். ஏ. ஒரு வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பு என்ற அறிவிப்பை வெளியிட்டார். இதன் மூலம் அந்த அமைப்பு அமெரிக்காவில் செயற்படுவதற்கும் ஆதரவு திரட்டுவதற்கும் முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு முதல் இந்த அமைப்பு வட அயர்லாந்திலும் பிரிட்டனிலும் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தி வந்ததனாலேயே அதனைப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்துள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வட அயர்லாந்துக்கு சமஷ்டி அடிப்படையில் அதிக அதிகாரங்களை வழங்குவதற்குப் பிரிட்டன் ஐரிஷ் குடியரசு இராணுவத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டதை அடுத்து அதிருப்தி அடைந்த ஒரு குழுவினர் ஐரிஷ் குடியரசு இராணுவத்தில் இருந்து பிரிந்து சென்று ரியல் ஐ. ஆர். ஏ. அமைப்பை உருவாக்கினர்.

அன்றிலிருந்து இந்த அமைப்பு 1998 ஆம் ஆண்டு வட அயர்லாந்தில் பெரும் தாக்குதல் ஒன்றையும் பிரிட்டனில் சிறு சிறு தாக்குதல்களையும் நடத்தி வந்துள்ளது. (ம)

## அமைதித்திட்ட உறுப்பினராகியதால்
# நேட்டோ ராணுவக் கட்டமைப்பில் சேரும் வாய்ப்பு கஸகிஸ்தானுக்கு!

லண்டன், மே 18

வடக்கு அட்லாண்டிக் நாடுகளின் கட்டமைப்பான நேட்டோவில் அமைதித்திட்ட உறுப்பினராக கஸகிஸ்தான் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நேட்டோவின் மத்திய கட்டளைத் தளபதியான ஜெனரல் டொமி பிரான் இதனை அறிவித்தார்.

கஸகிஸ்தான் அமைதித் திட்ட உறுப்பினரானதன் மூலம் எதிர்காலத்தில் நேட்டோவின் இராணுவக் கட்டமைப்பில் இணைந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கஸகிஸ்தான் இந்த உறுப்புரிமையைப் பெற்றுள்ளதன் மூலம் இனி நேட்டோ நிபுணர்களைக் கொண்டு தனது அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கவும் தனது பாதுகாப்பைப் பலப்படுத்தவும் வழி ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானுடனான எல்லையைப் பாதுகாப்பதற்கு கஸகிஸ்தான் தற்போது ரஷ்யாவையே நம்பி உள்ளது. நேட்டோ அமைதித்திட்டத்தில் உறுப்பினராகி உள்ளதன் மூலம் இனி இந்த நிலையில் மாற்றம் ஏற்படும். கஸகிஸ்தானின் பாதுகாப்புக்கு நேட்டோ பெருமளவு உதவிகளை வழங்கும்.

நேட்டோவில் அமைதித் திட்ட உறுப்பினர்களைச் சேர்க்கும் திட்டம் 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளை நேட்டோவுடன் நெருக்கமாக வைத்துக்கொள்வதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள் நேட்டோவுடன் இணைந்து செயற்பட முடிமெனினும் நேட்டோவில் நிரந்தர உறுப்புரிமை பெற முடியாது.

இதேவேளை —

நேட்டோவில் முன்னாள் சோவியத் நாடுகளை இணைத்துக் கொள்வதற்கு ரஷ்யா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஈராக் மீதான தடைகளைத் தளர்த்த அமெரிக்கா, பிரிட்டன் இணக்கம்

வாஷிங்ரன், மே 18

ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் தொடர்பான, தமது கொள்கைகளில் பிரிட்டனும் அமெரிக்காவும் கணிசமான மாற்றம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதாரத் தடைகளைத் தளர்த்த வேண்டும் என்ற — ஐ நாவின் நிரந்தர உறுப்பு நாடுகளான — சீனா, ரஷ்யா, பிரான்ஸ்ஆகிய நாடுகளின் முடிவுகளை ஏற்றுக் கொள்வது என அமெரிக்காவும், பிரிட்டனும் இணங்கி உள்ளன.

தடைகளை நீக்குவது தொடர்பான யோசனைகளை அவை தற்போது தயாரித்து வருகின்றன.

பொருள்களையும் ஈராக் விற்கவும் வாங்கவும் இந்த யோசனைகளில் இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய யோசனைகள் அடுத்த வாரம், கூடும் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் முன் சமர்ப்பிக்கப்படும் என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்புச் சபை அனுமதி அளித்ததும் ஈராக் மீதான பொருளாதாரத் தடைகள் 11 ஆண்டுகளில் முதற்தடவையாகக் குறிப்பிட்ட அளவில் தளர்த்தப்படும்.

இதேவேளை—

ஈராக்குடனான எல்லைகளில் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை மேலும் கடினமாக்குவது குறித்து வளைகுடா நாடுகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. (ம)

## உலக அரங்கில்

இராணுவ விநியோகங்கள் தவிர ஏனைய எல்லாப்

# இந்திய உயர் நிலை குழு இஸ்ரேல் விஜயம்

ஜெருசலேம், மே 18

இந்திய பாதுகாப்புத் துறைச் செயலர் யோகேந்திரர் நரேந்திரா தலைமையிலான உயர் நிலைக் குழு ஒன்று இஸ்ரேலுக்குச் சென்றுள்ளது இஸ்ரேலிய பாதுகாப்புக்துறை அமைச்சர் பெஞ்சமின் பெ. எலிஸலோவுடன் இந்தக் குழு பேச்சு நடத்தியது.

இஸ்ரேலிடம் இருந்து ஏவுகணைகள், ஆள்களில்லாது இயங்கும் விமானம், உயர் தொழில்நுட்ப தகவல் தொடர்பு கருவிகள் உட்பட பல்வேறு ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக இந்தியக் குழுவினர் பேச்சு நடத்தி உள்ளனர். (ம)

# பேச்சுக்கள் தோல்வி

பெய்ஜிங், மே 18

அமெரிக்காவின் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத்திட்டத்துக்குசீனாவின் ஆதரவினைப் பெறுவதற்காக அதிபர் புஷ், அரசின் பிரதிநிதிகள் சீனாவுடன் நடத்தி வந்த பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

இருநாடுகளுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் இந்தப் பேச்சுக்களினால் தீர்க்க முடியவில்லை என்று பேச்சுக்களில் ஈடுபட்ட அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# இளம் தொழிலாளர்கள் கடத்தல்

லண்டன், மே 18

கொலம்பியாவின் வடபகுதி நகரம் ஒன்றில் தோட்ட வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்புவதற்காக பஸ்ஸுக்குக் காத்து நின்ற 150 தொழிலாளர்களைத் திடீரென்று சுற்றி வளைத்த ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத கோஷ்டி ஒன்று அவர்களில் இருந்த இளம் யுவதிகளையும் ஆண்களையும் கடத்திச் சென்றுள்ளதாக ஏ. எவ். பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம)

# இந்திய அமைச்சரவை விரைவில் விஸ்தரிப்பு

புதுடில்லி, மே 18

இந்திய மத்திய அமைச்சரவை விரைவில் விரிவுபடுத்தப்படும் என்று பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் இந்த அமைச்சரவை விஸ்தரிப்பு இடம் பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. அன்றைய தினம் பிரதமர் வாஜ்பாய்க்கு காலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளது. அதற்கு முன்னர் இந்திய அமைச்சரவை விஸ்தரிக்கப்பட உள்ளது.

அமைச்சரவை விஸ்தரிப்பின் போது தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்த முன்னாள் ரயில்வேத் துறை அமைச்சர் மம்தா பனர்ஜி மீண்டும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார் என்று வாஜ்பாய் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஜோர்ஜ் பெர்னாண்டஸின் பொறுப்பில் இருந்த பாதுகாப்பு அமைச்சுக்கும் இந்த விஸ்தரிப்பின் போது புதியவர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் அவர் கூறியுள்ளார்.

## தமிழக அரசியலில்...

# தமிழகத் தேர்தல் தோல்விக்கு காரணம் கூறுகிறார் வாஜ்பாய்

புதுடில்லி, மே 18

தமிழகத்தில் தி. மு. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து கடைசி நேரத்தில் சில கட்சிகள் விலகியதுதான், அக் கூட்டணிக்கு தேர்தலில் தோல்வி ஏற்படக் காரணம் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறி உள்ளார்.

தனது மலேசிய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் வழியில், விமானத்தில் அவர் செய்தியாளர்களிடம் பேசினார். அதன் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தி. மு. க அணியில் இருந்து முக்கிய சில கட்சிகள் வெளியேறியதால் அணி பலவீனம் அடைந்தது. அதே நேரத்தில் அ. தி. மு க அணியில் கூடுதலான கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட்டன. இதனால் அந்த அணி பலமுள்ளதாக அமைந்தது அதனாலேயே பெரும் வெற்றி பெற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட செல்வி ஜெயலலிதாவை தமிழக ஆளுநர் ஆட்சி அமைக்க அழைத்தது குறித்து எந்தக் கருத்தையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார். (ம)

## பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில்
# காங்கிரஸ் ஆட்சி அமைக்க அ.தி.மு.க. ஆதரவு

சென்னை, மே 18

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் காங்கிரஸ், தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி அரசு அமைப்பதற்கு அ. தி. மு. க ஆதரவு வழங்கி உள்ளது.

காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்பிரணாப்முகர்ஜி செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசியதை அடுத்து அ. தி. மு. க. கூட்டணி அரசுக்கு ஆதரவளிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆட்சியில் பங்கேற்கப் போவதில்லை என்றும் —

வெளியில் இருந்தபடியே ஆதரவு தரப்போவதாகவும்— அ. தி மு. க அறிவித்துள்ளது.

இதே வேளை —

பாண்டிச்சேரியில் முதலமைச்சர் பதவிக்குப் பலத்த இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் அல்லாத காங்கிரஸ் கட்சித் தலைவர் ஏ. வி. சண்முகம், முதலமைச்சராவதற்குப் பகீரத முயற்சி செய்து வருகின்றார். எனினும் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இருந்தே ஒருவர் முதலமைச்சராக வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றனர். இன்று இது தொடர்பான தெளிவான முடிவு வரும் எனக் கருதப்படுகிறது. (ம)

### கொழும்புத்துறை மேற்கு
## வதரிபீட விநாயகர் தேவஸ்தானம்

மேற்படி ஆலயத்தின் மகாசபைக் கூட்டம் எதிர் வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.
தயவுசெய்து ஆலய மகாசபை உறுப்பினர்கள் யாவரும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

க. செந்தில்குமரன் — தலைவர்
செ. செல்வநாதன் — பொருளாளர்
பா. நந்தகுமார் — செயலாளர்

(87939)

### மினிசினிமா சங்க உரிமையாளர்களுக்கான
## அவசர கூட்டம்

நாளை (19 - 05 - 2001) சனிக்கிழமை காலை 9 மணிக்கு K. K. S. வீதியின் ஆரம்பத்தில் அமைந்திருக்கும் யா. ப. நோ. கூ. சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
யாழ். மாவட்டத்தில் அமைந்திருக்கும் அனைத்து மினி சினிமா உரிமையாளர்களும் தவறாது இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும். தவறுவோர் மினி சினிமா நடத்துவதற்கான உரிமையை இழக்கவேண்டி வரும்.
குறிப்பு:- சந்தாப்பணமாக ரூபா 200 செலுத்தத் தயாராக வரவும்.

மினிசினிமா உரிமையாளர்கள் சங்கம்.
(87940)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சகுந்தலாராணி மகாதேவன்
(இலங்கை மின்சாரசபை தட்டெழுத்தாளர், சுன்னாகம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலராணி மகாதேவன் காலமாகிவிட்டார்.
அன்னார் மகாதேவனின் அன்பு மனைவியும் றொசிளின் (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி) அன்புத் தாயாரும் காலஞ்சென்ற திரு திருமதி நல்லையாவின் (புஸ்பவாசா, தெல்லிப்பழை) அன்பு மகளும் சற்குணராசா (ஓமான்), திருமதி ராஜாவி செல்வராணி (லண்டன்), காலஞ்சென்றவர்களான திருமதிகள் புஸ்பராணி அமலதாஸ், சுகிர்தராணி பதுவைநாயகம், தேவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் டண்ஸ்ரன் பிராங்கிளின், வின்ஸ்ரன் பிராங்கிளின் (லண்டன்), அன்ரன் கிருபைநாயகம் (B A., வெளிவாரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.
அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (19 05—2001) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பொன்னம்பலம் ஒழுங்கை, உடுவில் வீதி, மானிப்பாயில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் தென்னிந்திய திருச்சபை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்

தகவல்:-
மகாதேவன் (கணவர்)

பொன்னம்பலம் ஒழுங்கை,
உடுவில் வீதி
மானிப்பாய்

(87932)

## திருமதி கிளேரா அருணோதயம் சின்னத்தங்கம் அருளையா

உசனைப் பிறப்பிடமாகவும் அருளையா பிளேஸ் கோப்பாயைச் சேர்ந்தவருமான திருமதி கிளேரா அருணோதயம் சின்னத்தங்கம் (சின்னம்மா) கனடாவில் (12- 05- 2001) காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற V. C அருளையாவின் மனைவியும் ராணி, றெஜி, மணி, பேபி, கிறிஸ்ரி, மலர், பவளி, அரியபாலன் ஆகியோரின் தாயாரும் மரியதாஸ், தவம், ஏவின் சாமுவேல், இந்திரா, சத்தியா, ஜெனற் நம்பியாறூரன், ஆனந்தராசா, வசந்தமாலினி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து, சிவகாமி, செபரத்தினம், உமையம்மா ஆகியோரின் சகோதரியும், கிறிஸ்ரி, டொறத்தி கணேசராசா, சுகந்தி, சுமந்திரன் ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.
அன்னாரின் நல்லடக்கம் Surrey (B C) Canada வில் நாளை (19- 05- 2001) நடைபெறும்.
அன்றையதினம் சனிக்கிழமை (19-05-2001) பி. ப. 5 மணிக்கு கோப்பாய் பரி. கன்னிமாயாள் ஆலயத்தில் (கிறீஸ்தவ கல்லூரிக்கு அருகில்) ஜெபவழிபாடு நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
டொறத்தி கணேசராசா
(அல்வாய்)
T. P. 070 - 212590

R A Aruljah
1225 Lincoln Drive,
Port Coquitlam (B C)
V387, 19 Canada.
T. P 001 - 604 - 941 4181

(87938)

## உறவினர்க்கு அழைப்பு

1996ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் நாவற்குழிப் பகுதியில் படையினர் நடத்திய தேடுதலின் போது கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போன 25 பேரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களை இன்று காலை 9 மணிக்கு யாழ். மேல் நீதிமன்ற வளவுக்குள் சமுகமளிக்குமாறு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது.
பின்வரும் 25 பேரின் உறவினர்களே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

★ தர்மலிங்கம் கவீந்திரராசன் (22 வயது) — நாவற்குழி.
★ பொன்னம்பலம் கண்ணதாசன் (21 வயது) — தச்சன் தோப்பு.
★ இரத்தினம் செல்வகுமார் (21 வயது) — தச்சன் தோப்பு.
★ ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிற் (19 வயது) — நாவற்குழி.
★ ஜேசுதாஸ் ஸ்ரலின் ஜீவா (22 வயது) — நாவற்குழி.
★ ஜோவாம்பிள்ளை அன்ரன் அமலதாசன் (32வயது) —நாவற்குழி.
★ இமானுவேல் மரிட்ஜெயசீலன் (23 வயது) — நாவற்குழி.
★ பொன்னையா ஜெயராசா (27 வயது) — நாவற்குழி.
★ கோபாலசிங்கம் அம்பிகைபாலன் — நாவற்குழி.
★ கந்தையா புஸ்பராசா (27 வயது)—தச்சன் தோப்பு.
★ பரமநாதன் தவேஸ்வரன் (21 வயது) — கோயிலாக்கண்டி.
★ சின்னத்தம்பி திருவருட்செலவன் (21 வயது)—கோயிலாக்கண்டி.
★ சின்னத்தம்பி சிவகுமார் (31 வயது)—தச்சன்தோப்பு
★ கணேசலிங்கம் கிருபாகரன் (18 வயது)—நாவற்குழி.
★ திரவேல்பிள்ளை கேதீஸ்வரன் (31 வயது) — நாவற்குழி
★ சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (21 வயது)— நாவற்குழி.
★ கணேஷ் ரமேஷ் (25 வயது) – நாவற்குழி
★ அன்ரன் திலகரத்தினம் (23 வயது)—நாவற்குழி
★ பொன்னன் ரவிந்திரன் (31 வயது)—கைதடி தெற்கு.
★ இராமநாதன் அன்னலிங்கம் (26 வயது)—மறவன் புலோ
★ முருகன் ஜெயரத்தினம் (30 வயது)—மறவன்புலோ.
★ முருகன் சிவராசா (22 வயது) – மறவன்புலோ.
★ பூபாலசிங்கம் ஜெயலலிதா (செல்வி) — மறவன் புலோ.
★ அரசுமுடி கேடீஸ்வரன்.

மேற்படி 25 பேரின் உறவினர்களும் தங்களிடமுள்ள ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறும்—
மேலதிக விவரங்கள் அங்கு தெரிவிக்கப்படும் எனவும்— சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (உ-4)

## வலைப்பந்தாட்டம்

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களிடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. -86)
இன்றைய ஆட்டங்களில்
★ பிற்பகல் 3 மணி கலாமன்ற ச. ச. நிலைய 'ஏ' அணி எதிர் கொக்குவில் மத்திய ச. ச. நிலைய 'ஏ'
★ பிற்பகல் 3-30 மணி — பாரதி ச. ச. நிலைய அணி எதிர் ஞானவைரவர் ச. ச. நிலைய அணி.
★ பிற்பகல் 4 மணி ஜெயபாரதி ச. ச. நிலைய அணி எதிர் கலாமன்ற ச.ச. நிலைய 'பி' அணி. (உ-86)

## ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்

# 10 ஆம் நாள் சப்பறத் திருவிழா
(சகோபுரக் காட்சி)

காலம்: நாளை (19-05-2001) சனிக்கிழமை

விநாயகப் பெருமான். சிவனும் உமையும், சுப்பிரமணியப் பெருமான் வாகன ரூடர்களாக 33 அடி உயரச் சப்பறத்தில் மின் தீபங்களினால் அலங்கரிக்கப்பட்டு பிற்பகல் 6-00 மணிக்கு வீதியுலா வருவார்கள்.

மாலை 3-00 மணி: விசேட பூசை, யாகம்
'' 4-30 மணி; சொற்பொழிவு
திரு. அ. கமலநாதன் அவர்கள்
'' 5-30 மணி: வசந்தமண்டபப் பூசை
'' 6-00 மணி, சப்பறக் காட்சி உலா

மங்கள இசை:
நாதஸ்வர வித்துவான்
K கோவிந்தசாமி புதல்வர்கள்
(இணுவில்)
K கலியுகவரதன் குழுவினர்
(இணுவில்)

உபயகாரர்
லட்சுமி விலாஸ்
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

(சி/16755)

# அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் கடமை செய்யும் பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரை மக்கள் குறை நிவர்த்தி சேவையின்போது சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.
ஆகவே 19 - 05 - 2001 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யா/ யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

— செயலாளர்
(87930)

# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விப்பணிப்பாளர்
திரு வீ. இராசையா
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
(87935)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியரான

## வி. தம்பிப்பிள்ளை

அவரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட அரசாங்க அதிபரும்,
ஊழியர்களும்.

மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
(87925)

# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர்
திரு. வீ. இராசையா
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்கள் இறைவன் திருவடி சேர்ந்தமையிட்டு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/ மானிப்பாய் மெமோறியல்.
ஆங்கில பாடசாலை.

(87922)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 - 06 - 1912 | 10 - 06 - 1999 |

அமரர்

## அரியகுட்டி பொன்னுத்துரை

திதி:18-05-2001

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மனதை
விட்டு என்றும் மாறாதையா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(87928)

# கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 - 04 - 1941 | 13 - 05 - 2001 |

## திருமதி இராசேந்திரம் சிகாமணி

அம்மா உன் பிரிவால்
உள்ளம் என்றும் கலங்குதம்மா
எம்மை அயலார் பிள்ளைகள் என்றெண்ணாமல்
உம் பெற்ற சொந்தப் பிள்ளைகள் போல்
எம்மை அரவணைத்தாய்
நேற்றைய நாள் உம் பிரிவுகண்டு
அதிர்ச்சி கண்டோம்
உம்மைப் போல் அம்மாவை - யாம்
எப்போது காண்போம்
உம் பிரிவால் உம்கணவர் துயர் காண
பெற்ற மக்கள் அல்லோல கல்லோல மடைய
மருமக்கள் உம்பிரிவால் தாயை
இழந்த கன்று போல் தவித்திட
பேரப்பிள்ளைகள் அம்மம்மா தூங்குகிறாள் என்று நினைக்க
இந் நிலை கண்டு - யாம்
ஓலமிட்டு அழுகின்றோம்
அம்மா உன்பிரிவால் வாடி துயருறும்,
உமது மக்கள் உறவினருக்கு எமது
சங்கத்தின் அனுதாபங்கள்

கடற்றொழிலாளர் சங்கம்,
பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை.

(87933)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசேந்திரம் சிகாமணி (பாக்கியம்)

பருத்தியடைப்பு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சிகாமணி ஞாயிற்றுக்கிழமை 13-05-2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகலிங்கம் இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், இராசசேகரம் (ஜோமனி), இராமேஸ்வரன் (முன்னாள் யாழ்.மாவட்ட நா.உ.), இராமநாதன் இராமமூர்த்தி (முன்னாள் யாழ்.மாவட்டப் நா.உ., இந்தியா) காலஞ்சென்ற குணசேகரன், சுதர்சன், ஞானதேசிகன்(லண்டன்), திருமதி கி.ஞானசோதி, காலஞ்சென்ற ராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதிகள் இ.கலைமதி (திருகோணமலை), சி.குணவதி, இ.கற்பகவல்லி, சி.ரேவதி, சு.தர்மலா, ஞா.வளர்மதி (லண்டன்), ய.கிறிஸ்தோப்பர் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (18-05-2001) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி வரை 177, 1 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் ஜனநாயகப் பேரவை தலைமை செயலகத்தில் வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைக்காக ஊர்காவற்றுறையிலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நாளை(19-05-2001) சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு பூதவுடல் பருத்தியடைப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நா.இ.இராமேஸ்வரன்.
(முன்னாள் நா.உ றுப்பினர்)
தலைவர்,
மக்கள் ஜனநாயகப் பேரவை.

*இல.177,முதலாம்குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(87934)

## கல்விக்கல்லூரி சான்றிதழ் பெறாதவர்களுக்கு

யாழ்ப்பாணம்,மே18

கல்விக் கல்லூரிகளில் கற்கை நெறியை முடித்து இதுவரை சான்றிதழ்களைப் பெறாதவர்கள் தமது விவரங்களை பரமேஸ்வரா சந்தி அருகே 320, பலாலி வீதி என்ற முகவரியில் இயங்கும் கல்விக் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## பயிற்சி வகுப்புகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே18

நாளையும் நாளை மறுதினமும் இடம் பெயர் சேவை நடைபெறவுள்ளதால் யாழ்.வலயத்தில் அத்தினங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சகல சேவைக்காலப் பயிற்சி நெறிகளும் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் அறிவித்துள்ளார். (உ-3)

## பரீட்சை 21 ஆம் திகதி

யாழ்ப்பாணம்,மே18

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச சேவை ஆணைக்குழுவின் கலாசார மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தமிழ், சிங்கள வாய்மொழிப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி மேற்படி பரீட்சை நடைபெறும் என்று நேற்றைய உதயனில் வெளியான செய்தி தவறாகும். (உ-10)


BEACON
யாழ் நகர்
நாடகமும் அரங்கியலும்
G.A.Q, BA - PA - I, PA - II
ஆகிய பிரிவுகளுக்கு
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
காலம்:- சனி, ஞாயிறு (87906)
ஆசிரியர்:- N.P. கணேசராஜா

NEW SCIENCE COLLEGE
PHYSICS
M.KARUNANITHY
சடமும் கதிர்ப்பும்
SAT., SUN. 7-00 - 8.00
ஆரம்பம்: 19-05-2001
இலத்திரனியல்
THU., FRI. - 3.00 - 4.00
ஆரம்பம்: 24-05-2001
(87936)

ராஜா
யாழ்ப்பாணம்
சரத்குமார், தேவயாணி
மற்றும் பலர் நடிப்பில்
பாட்டாளி
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)

லஷ்சுமி
இணுவில்
இன்று முதல்
கார்த்திக், லைலா,
மனோரமா, தாமு நடிப்பில்
ரோஜாவனம்
(ரீல்ஸ்)
தினசரி 3 காட்சிகள்
10.30, 2.00, 5.00 (புதியநேரம்)
(87942)

நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று மட்டும்
சினிமாஸ் லிமிட்டட் வெளியீடு
அர்ஜுன், மீனா, ஜோதிகா
நடித்த
ரிதம்
(ரீல்ஸ் வெளியீடு)
காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்)
(87878)


## காங்கிரஸ் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே18

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அங்கத்தவர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தலைமையில் கொக்குவில் கிழக்கு கருவேலடி ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் இக்ககூட்டம் நடைபெறும். (உ-4)

# வாழ்த்துகின்றோம்

பொன்விழாக் காணும்
எங்கள் கல்லூரி அதிபர்
**திரு.நா.வன்னியசிங்கம்** அவர்களை
மேலும் அவர் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
வர்த்தகப் பிரிவு 2001

(87921)

# கண்ணீர் அஞ்சலி

*வலிகாமம் கல்விப்பணிப்பாளர்*
திரு.வீ.இராசையா *அவர்களின் அன்புத் தாயார்*

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறுவதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகத்தினர்,
யா/ நவாலி ம.வி., மானப்பாய்.

(87941)

# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விப் பணிப்பாளர்
திரு.வீ.இராசையா அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்.

(C/16759)

# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விப் பணிப்பாளர்
திரு.வீ.இராசையா அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையால் அவரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
காரியாலய உத்தியோகத்தர்கள், மாணவர்கள்,
சங்கானைக் கல்விக்கோட்டம்.

(C/16760)

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
மக்கள் ஜனநாயகப் பேரவை தலைவருமான
**என்.ஆர்.இராமேஸ்வரன்** அவர்களின்
அன்புத் தாயார்



## திருமதி இராசேந்திரம் சிகாமணி

(பாக்கியம்)

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்கள், உறவினர்கள் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நண்பர்கள்,
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.
(E.P.R.L.F.)

(C/16757)

## குறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் குறைநிவிர்த்தி சேவையின் போது பணியாற்ற கொழும்பிலிருந்து வருகை தருகிறார்கள்.

கடவுச்சீட்டினைப் பெறவிரும்புவோர், புகைப்படங்கள் மற்றும் தகுந்த ஆவணங்களுடன் இந்தச் சேவையில் கலந்துகொண்டு தங்கள் கடவுச்சீட்டுகளைப் பெற உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகார அமைச்சு கேட்டுள்ளது.

இதேவேளை, மக்கள் குறைநிவிர்த்தி சேவையின்போது, தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த மூவாயிரம் பேருக்குரிய அடையாள அட்டைகள், ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரிகளினால் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சிறந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவருக்கு விருது வழங்கிய பின்னர் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் மௌனஅஞ்சலி செலுத்தினர்.

இந்த வைபவத்தில் சிறந்த தமிழ பத்திரிகையாளருக்கான விருது வீரகேசரி மட்டக்களப்புச் செய்தியாளர் ஜி.நடேசனுக்கும் மூத்த பத்திரிகையாளருக்கான விருது வீரகேசரியின் கண்டி செய்தியாளர் கே.பி.சிவத்துக்கும் வழங்கப்பட்டன.

சிறந்த தமிழ்ப்பத்திரிகை வடிவமைப்புக்கான விருதை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'பாதுகாவலன்' பத்திரிகையின் ஆசிரியர் வண. ரூபன் மரியாம்பிள்ளை பெற்றுக் கொண்டார். தமிழ் பத்திரிகைகளில் சிறந்த பத்திரிகைகளுக்கான விருதுகள் 'ஆதவன்', 'சரிநிகர்' ஆகிய பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டன.

## பேச்சுக்கு எதிராக கொழும்பில் கூட்டம்

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்தக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து சிங்கள அமைப்புகள் ஒன்று சேர்ந்து மாபெரும் கூட்டம் ஒன்றை எதிர்வரும 26 ஆம் திகதி கொழும்பில் நடத்தவிருக்கின்றன. (உ-3)

## நினைவுதினம்

கடந்த ஆண்டு வெசாக் தினத்தன்று மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த 17 பொதுமக்களினதும் முதலாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பு பகுதியெங்கும் பிரார்த்தனைகள் இடம்பெற்றுள்ளன.(உ-10)

## அபிவிருத்திக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்பொழுது கூட்டம் நடைபெறும் இடம் தமக்குப் பாதுகாப்பான இடமாக இருக்கும் என தாம் கருதாமையினாலும் - இக்கூட்டத்தில் தாங்கள் கலந்துகொள்ளவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இன்று இந்த அமைச்சு அலுவலகத்தில் தொடர்ந்து நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தினையும் இவர்கள் பகிஷ்கரிப்பர் எனக் கூறப்படுகிறது.

இன்றைய கூட்டம் அமைச்சர் டகளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா ஆகியோரின் இணைத் தலைமையில் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு என்று திருகோணமலையிலிருந்து மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் கொழும்பிலிருந்து மத்திய அமைச்சு மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். (உ-5)

## தடை நீக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களுக்கு அத்தியாவசியமான ஒரு முன் நடவடிக்கை என்று தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார்.

"தடை செய்யப்பட்ட - ஒரு சட்ட விரோதமான - பயங்கரவாத - அமைப்பாக புலிகள் இயக்கம் ஒரு போதும் பேச்சுக்களில் கலந்துகொள்ளப் போவதில்லை" - என்பதை அவர் திட்டவட்டமாக எடுத்துரைத்தார்.

"எமது இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும் என்பதே தமிழீழ மக்கள் அனைவரினதும் ஏகோபித்த அபிலாசை ஆகும். எனவே சந்திரிகா அரசு எம்முடன் பேச்சுக்களை நடத்தி இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமாயின் எமது மக்களின் அபிலாஷைக்கு இயைந்து எம் மீது குத்தப்பட்டுள்ள பயங்கரவாத முத்திரையை அகற்ற முன்வர வேண்டும்" - என்றும் தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

நோர்வே அரசு சமர்ப்பித்த புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றியும் இருதலைப்பட்சமான போர்நிறுத்தம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இவ்விரு விடயங்கள் குறித்தும் பேச்சுக்களின் போது எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

தொடர்ந்தும் இவ்விடயங்கள் குறித்தும் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நோர்வேத் தூதுக் குழுவினர் இன்று காலை மல்லாவியிலிருந்து வவுனியா சென்று அங்கிருந்து கொழும்பு செல்ல உள்ளனர்.

- இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)


புதிய பிரிவு ஆரம்பம்
COREL DRAW
ADCS, SCH II DDP, SCH III DDP ஆகிய பிரிவுகளுக்கு Corel Draw வகுப்பு எதிர்வரும் 20.05.2001 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணிக்கு ஆரம்பமாகும்.
Note: புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.
IBMS NO.701, K.K.S ROAD JAFFNA.

சுனில் ஆட்ஸ்
10-05-2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
23-05-2001 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.
சுனில் ஆட்ஸ்
277, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
Note:-
※ CD கவருக்கான Print உடன் CD யில் இருந்து CD க்கு பாடல் பதிவு செய்திட 300/= மட்டுமே
※ எம்மிடம் M.P 3 தமிழ், ஆங்கிலம், ஹிந்தி படப்பாடல்கள CD கள் விற்பனைக்குண்டு
※ A.R. ரஹ்மான் MP3 CD கள் விற்பனைக்குண்டு
※ COMPUTER க்கான உதிரிப் பாகங்கள் விற்பனைக்குண்டு.
(C/16758)

கணக்கீடு
முகுந்தன்
B.B.A(HONS)F.M.SPL.
A/L 2002
நன்மதிப்பு
ஆரம்பம்:- 20-05-2001
ஞாயிறு 7.30
பொருளியற் கல்லூரி
(87848) இணுவில்.

நாளை ஆரம்பம்!
A/L 2002
பிரிவு -II
"நட்டஈட்டுக் கோரிக்கை"
காலை 10 மணி
கணக்கீடு
D.SAM
DMI
யாழ்.நகர்
(C/16723)

BIT ☞ IIS
நீங்கள்,
கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பட்டதாரியாக விரும்புகிறீர்களா?
அதை ஒரு நவீன கணனித் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உத்தரவாதம் உள்ள நிறுவனத்தில் கல்வி பயில விரும்புகிறீர்களா?
ஆம் எனில்,
உடனடியாக எமது தலைமை அலுவலகத்திலோ அல்லது கிளை நிறுவனங்களுடனோ தொடர்பு கொண்டு விண்ணப்பியுங்கள்
எமது இறுதிக் கட்டப் பதிவுகள் எதிர்வரும் 31ம் திகதி கொழும்பு பல்கலைக் கழகத்தில் இடம்பெற இருப்பதால்
30.05.2001 பிற்பகல் 4 மணிக்கு
முன் விண்ணப்பப்படிவங்கள் எமது அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
தெரிவுப் பரீட்சைக்கான முன்னோடி வகுப்புக்கள்
ஆரம்பம 19. 05. 2001 - 3.00 pm
Institute of Informatics Studies
(Affiliated to Irish International University, Dublin.)





அறிவித்தல்
நாளை 19.05.2001 சனிக்கிழமை தவிர்க்க முடியாத காரணத்தால் மு.ப. 11.00 மணிக்குப் பின்னர் தலைமைக்காரியாலய வகுப்புக்கள் எவையும் (செய்முறை வகுப்பு உட்பட) நடைபெற மாட்டாது.
Director: (Ad) (C/16750)
IBMS
No.701 K.K.S.Road, Jaffna

வந்துவிட்டது
மினிபஸ், இகூசு,
லொறி கண்ணாடி





சதாஸ்
மோட்டோர்ஸ் & ஹாட்வெயார்ஸ்
56/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. - FAX: 021 - 2522
(C/16717)

பிரத்தியேக வகுப்பு!
A/L 2003
இணைக்கக் கூற்றுக்கள்
நாளை ஆரம்பம்
மாலை 5 மணி
கணக்கீடு
D.SAM
76/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/16721)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரன் சர்மினி

சரசாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரன் சர்மினி நேற்று அகால மரணமானார்.

அன்னார் பரமேஸ்வரனின் அன்பு மனைவியும் குணரத்தினம் - பவளம் தம்பதியினரின் அருமை மகளும் குமுதினி, தர்சினி (மாணவி, கனகரத்தினம் ம.ம.வி.), மயூர்தினி (மாணவி, கனகரத்தினம் ம.ம.வி.), குகானந்தன் (மாணவன், யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் சகோதரியும் சுதாகரனின் மைத்துனியும் ஐயாத்துரை - பாக்கியம் தம்பதியினரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் இன்று (18-05-2001) வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (C/16763)
ஐ.குணரத்தினம்
(தந்தை)

### ஆழ்வார்ப்பிள்ளை சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற இரத்தப் பரிசோதகர்)

அல்வாய் வடமேற்கு, திக்கத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார்ப்பிள்ளை சிவப்பிரகாசம் நேற்று (17-05-2001) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார்ப்பிள்ளை (ஆசிரியர்) - தெய்வானையின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சிவகுமாரன், சிவநேசன், சரோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ரஜினியின் மாமனாரும் விதுஷாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18-05-2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்* (C/16762)
சிவகுமாரன்
(இந்திரன் -மகன்)


MICRO PC SYSTEMS
MIPAQ PENTIUM III 733 MHZ
※ Gigabyte Main board
※ 64MB Ram
※ 20.4 GB HDD
※ 8MB AGP VGA
※ 14"Monitor
※ PS/2Key Board and Mouse
※ 52X CD-ROM
※ 32 Bit Sound Card, Speakers 340 W
※56 Kbps Internal Modem
MIPAQ CELERON 566MHZ and Cyrix 333 MHZ
இந்தியாவில் இருந்து நேரடியாகத் தருவிக்கப்பட்ட தமிழ் SOFTWARE பதிப் மிகக்குறைந்த விலையில்
MICROSOFT நிறுவனத்தினரின் அடுத்த வெளியீடான Windows 2001 XP CD இப்பொழுது விற்பனையில்.......!
Brandnew பிறான் நியூ கணனிகள். 59,500/= முதல்
மற்றும் Scanners, Printers, உங்கள் கணனிக்குத் தேவையான அனைத்துப் பாகங்களையும் நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
FREE - INTERNET CONNECTION
Head Office:-
No.15,36th Lane, Wellawathe
Colombo - 06
T.P. - 074 - 513235/ 074 - 516764
Branch:
No.9Modern Market
Hospital Road,
Jaffna.021 - 2067


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் (18.05.2001) இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.